₹100/-

ஞானகுரு


# மகிழ்ச்சி

எஸ்.கே.முருகன்

செப்டம்பர் 2022



**நீ எதை**
**தேடுகிறாயோ**
**அதுவும்**
**உன்னைத்**
**தேடுகிறது**








# நாளைக்கும் நிலவு வரும்..!

இரவு நேர ரயில் பயணம். அந்த கோச்சில் இருந்த அனைத்து கம்பார்ட்மென்ட்களிலும் விளக்கை அணைத்துவிட்டு தூங்கிக்கொண்டு இருந்தனர். ஒரே ஒரு கம்பார்ட்மென்ட்டில் மட்டும் மூன்று நண்பர்கள் சலசலவென பேசிக்கொண்டு இருந்தனர். அதனால் அவர்களுடன் பயணித்த முதியவர் ஒருவர் தூங்க முடியாமல் அவஸ்தையுடன் படுத்திருந்தார்.

அந்த பக்கம் கிராஸ் செய்த போலீஸ் அதிகாரி ஒருவர் முதியவர் நெளிவதைக் கண்டு, 'ஏன் அவரை தூங்கவிடாமல் தொந்தரவு செய்கிறீர்கள்?' என்று இளைஞர்களிடம் கோபப்பட்டார். அதோடு முதியவரிடம், 'நீங்களே இவர்களை அதட்டியிருக்கலாம் அல்லது புகார் செய்திருக்கலாமே" என்று கேட்டார்.

அதற்கு முதியவர், 'இன்னும் சில மணி நேரம்தான் பயணம். இந்த கொஞ்ச நேரத்திற்காக இவர்கள் மீது நான் கோபப்பட வேண்டுமா..? அதனால் தேவையற்ற சர்ச்சை உருவாகலாம். இந்த இடையூறை ஏற்றுக்கொள்வதில் எனக்கு எந்த பிரச்னையும் இல்லை. கொஞ்சநேரம்தானே இந்த பயணம்' என்றார் புன்னகையுடன்.

முதியவர் சொன்ன பதில் போலீஸ் அதிகாரியை மட்டுமின்றி, அந்த இளைஞர்களையும் யோசிக்க வைத்தது. உடனே அந்த இளைஞர்கள் முதியவரிடம் மன்னிப்பு கோரினார்கள். இந்த பயணம் கொஞ்சநேரம்தான் என்பதை மனதில் கல்வெட்டு போன்று பதிந்து கொண்டார்கள்.

ரயில் பயணம் மட்டுமல்ல, மனிதனின் வாழ்க்கை பயணமும் கொஞ்சநேரம்தான். இந்த பிரபஞ்சத்தின் வயதை கணக்கிட்டுப் பார்க்கையில், மனிதர்கள் அற்பமான சில வருடங்களே இங்கு வாழ முடியும். இந்த குறைந்த வாழ்க்கை நேரத்தில் பிறர் மீது வருத்தமும் கோபமும் கொள்ளத்தான் வேண்டுமா..?

வாழப்போகும் கொஞ்ச காலமும் பேராசை, சந்தேகம், வாக்குவாதம், பொறாமை, பொய் சொல்லுதல், புறம் பேசுதல், அதிருப்தி, குறை கண்டுபிடித்தல் போன்ற குணங்களுடன் அதிருப்தியாகவே வாழப் போகிறோமா..? இதனால் அடுத்தவருக்கு மட்டுமல்ல, உங்கள் மனமும் துன்பத்திலே இருக்கும்.

எனவே, தேவையில்லாமல் யாருடனும் வாக்குவாதம் செய்யாதீர்கள். உங்களை யாராவது விமர்சனம் செய்தால் ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் மனதை யாராவது காயப்படுத்தினாலும், அவமானப்படுத்தினாலும் அமைதியாக இருங்கள். ஏனென்றால் நமது பயணம் கொஞ்ச காலம்தான்.

இன்பங்களை ஏற்றுக்கொள்வது போல், பாராட்டுகளை ஏற்றுக்கொள்வது போல் துன்பங்களையும் அவமானங்களையும் ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்கு தீமை செய்பவர்களை மன்னிக்கவும் மறக்கவும் பழகிக்கொள்ளுங்கள்.

ஏனெனில், நமது வாழ்க்கை பயணத்தின் நீளம் யாருக்கும் தெரியாது. நாளைக்கும் நிலவு வரும்... நாளைக்கும் சூரியன் வரும். ஆனால், நாம் இருப்பதுதான் உறுதி இல்லை.

எனவே, குடும்பத்தினர், நண்பர்கள், அக்கம்பக்கத்தில் வசிப்பவர்கள், உடன் பணியாற்றுபவர்கள் போன்ற எல்லோருடனும் புன்னகையை மட்டும் பகிர்ந்துகொள்வோம். அதுதான், இந்த குறுகிய கால பயணத்தில் நமக்கு மகிழ்ச்சி தரக்கூடியது.

- ஆசிரியர்

# நீ எதை தேடுகிறாயோ அதுவும் உன்னைத் தேடுகிறது

இயற்கை நிறைய நிறைய ஆச்சர்யங்களை தனக்குள் ஒளித்து வைத்திருக்கிறது. 'நீ எதுவாக விரும்புகிறாயோ, அதுவாக மாறுவாய்' என்று சொல்வதும், 'நீ எதை தேடுகிறாயோ, அதுவும் உன்னைத் தேடுகிறது' என்பதும் சொல்லவருவது ஒரே கருத்தைத்தான்.

ஆம்... உங்களுடைய தேடுதலில் நேர்மையும், தீவிரமும், உறுதியும் இருக்கும் என்றால், நீங்கள் எதை தேடுகிறீர்களோ, அதுவும் உங்களைத் தேடி வரும். அப்படி வரும் வாய்ப்பை உறுதியாகப் பற்றிக்கொண்டால் போதும். இதற்கு எத்தனையோ உதாரணங்கள் உண்டு.

எல்லோருக்கும் தெரிந்த நடிகர் வடிவேலுவை ஒரு உதாரணமாகப் பார்க்கலாம். மலையளவுக்கு நடிகராகும் ஆசை இருந்தாலும், சென்னைக்குப் போய் சினிமா வாய்ப்பு கேட்கவும் வழி இல்லாதவராக மதுரை பக்கம் இருந்தார் வடிவேலு. ஒரு திருமணத்துக்காக மதுரைக்குப் போன இயக்குனர் கஸ்தூரி ராஜாவும், நடிகர் ராஜ்கிரணும் தற்செயலாக வடிவேலுவை சந்திக்கும் சூழல் உருவாகிறது. அந்த சந்திப்பு, சினிமா வாய்ப்பாக மாறுகிறது.

ஆம், வடிவேலு தேடிக்கொண்டு இருந்தது, அவரையும் தேடியது. அதனால்தான் அந்த வாய்ப்பு சாத்தியமானது.





www.gyanaguru.com

> அமெரிக்க அதிபர் ஒபாமா, தன்னுடைய 55வது வயதில் அரசியலில் இருந்தே ஓய்வு பெறுகிறார். ஆனால், ஜோ பைடன் 78 வயதில்தான் அதிபராக வருகிறார். இதற்கெல்லாம் காரணம், அவர்கள் தேடினார்கள். ஒரு சிலருக்கு உடனே அவர்கள் தேடியது கிடைத்துவிடுகிறது, ஒருசிலருக்கு அது காலதாமதம் ஆகிறது.



அதேபோல், நீங்கள் தேடுவது, உங்களைத் தேடிவரும்போது அலட்சியம் செய்தால் என்னாகும் என்பதற்கும் உதாரணம் இருக்கிறது. போட்டோ, கேமரா என்றாலே அந்த காலத்தில் கோடக் நிறுவனம்தான் நினைவுக்கு வரும். துல்லியத்துக்காகவும், அடுத்தகட்ட முயற்சிகளுக்காகவும் பல்வேறு ஆய்வுகள் செய்துகொண்டே இருந்தனர். கோடக் நிறுவனத்தில் பணியாற்றிய ஒரு விஞ்ஞானி, டிஜிட்டல் கேமராவை உருவாக்கினார். இதனை இப்போது தயாரித்தால், எல்லோர் கையிலும் ஒரு கேமரா இருக்கும் என்று சொன்னார்.

ஆனால், கோடக் நிறுவனம் சுயநலத்துடன் யோசித்தது. அதாவது டிஜிட்டலை அறிமுகம் செய்தால், ஃபிலிம், கேமரா, பிரிண்டிங் போன்ற அத்தனை துறையும் நஷ்டமாகிவிடும் என்ற சிந்தனையில், டிஜிட்டல் கேமரா தொழில் நுட்பத்தை ஒளித்துவைத்தது. ஆனால், நாலைந்து வருடத்தில் வேறு சில நிறுவனங்கள் டிஜிட்டல் கேமராவில் கால் பதித்து, மளமளவென முன்னேறின. தாமதமாக தன்னுடைய தவறை உணர்ந்து டிஜிட்டலில் கோடக் நிறுவனம் இறங்குவதற்குள், அந்த நிறுவனம் மூழ்கிப் போனது.

எனவே, ஆசைப்படுவது மட்டும் போதாது. அதற்கான வாய்ப்பு வரும்போது, அதனை சரியாக பற்றிக்கொள்ளவும் வேண்டும்.

அமெரிக்க அதிபர் ஒபாமா, தன்னுடைய 55வது வயதில் அரசியலில் இருந்தே ஓய்வு பெறுகிறார். ஆனால், ஜோ பைடன் 78 வயதில்தான் அதிபராக வருகிறார். இதற்கெல்லாம் காரணம், அவர்கள் தேடினார்கள். ஒரு சிலருக்கு உடனே அவர்கள் தேடியது கிடைத்துவிடுகிறது, ஒருசிலருக்கு அது காலதாமதம் ஆகிறது.

சாக்லேட் சாப்பிடும்போது சிறு துண்டு கீழே விழுகிறது. அதை நீங்கள் கவனிக்கவில்லை என்றால், கொஞ்சநேரத்தில் அதனை தேடி எறும்புகள் வந்துவிடும். எத்தனை சுத்தமான இடத்தில் சாக்லேட் விழுந்தாலும் எறும்பு, ஈ போன்றவை மொய்ப்பதை யாராலும் தடுத்துவிட முடியாது. இதுதான் இயற்கை நியதி. அதாவது எறும்புகள் மட்டும் இனிப்பை தேடவில்லை. இனிப்பும் எறும்புகளைத் தேடுகிறது.

அப்படியென்றால், நாம் எதை தேடினாலும் கிடைத்துவிடுமா என்ற கேள்வி வருவது சகஜம்தான். ஏனென்றால் பலரும் வாழ்நாள் முழுவதும் தேடிக்கொண்டே இருக்கிறார்கள், எதுவும் கிடைப்பதில்லை. குறிப்பாக கோலிவுட்டில் சினிமா வாய்ப்பு தேடி ஆயிரக்கணக்கான நபர்கள் அலைந்துகொண்டே இருக்கிறார்கள். ஆயிரத்தில் ஒருவரோ, இருவரோதான் அடுத்த கட்டத்திற்குள் நுழைய முடிகிறது. அப்படியென்றால் என்ன அர்த்தம்..?

## மந்திரச்சொல்


குறை காண்பவர் கண்களால்
எதையும் ரசிக்க முடியாது.
எல்லாவற்றையும்
ரசிப்பவர்களுக்கு குறைகள்
கண்ணுக்குத் தெரியாது.

உங்கள் தேடுதலில் உண்மையும் நேர்மையும் தீவிரமும் போதிய அளவுக்கு இல்லை என்று அர்த்தம். வேறு வகையில் சொல்வது என்றால் நிச்சயம் ஏதோ ஒரு வாய்ப்பு வந்திருக்கும், அதனை சரியாக பற்றிக்கொள்ளாமல் தவற விட்டிருப்பீர்கள். விக்ரம் நடிகராக வேண்டும் என்று ஆசைப்பட்டார். நடிகராக மாறிய பிறகும் ஒரு வெற்றி கிடைக்காமல் அவஸ்தைப்பட்டார். அதற்காக அவர் சினிமாவை விட்டு போய்விடவில்லை. டப்பிங் ஆர்ட்டிஸ்டாக, கதை ஆலோசகராக ஏதோ ஒரு வகையில் வெற்றிக்கான வாய்ப்பை தேடிக்கொண்டே இருந்தார். அந்த தேடுதல்தான் அவருக்கு சேது படத்தையும், பெரும் வெற்றியையும் கொண்டுவந்தது

தேடுங்கள் கிடைத்துவிடும் என்பதுதான் இயற்கை மனிதனுக்குக் கொடுத்திருக்கும் வரம். தவம் போன்று தேடுங்கள், நிச்சயம் கண்டடைவீர்கள்.









# மகிழ்ச்சியான குழந்தைகள் எந்த நாட்டில் இருக்கிறார்கள்?

“இன்னைக்கு ஸ்கூல் லீவு” என்று சொல்லும்போது குழந்தைகள் முகத்தில் தோன்றும் மகிழ்ச்சியை வேறு எங்கேயும் நாம் பார்த்துவிட முடியாது. முந்தைய காலங்களில் போன்று இப்போது பள்ளிகளில் மாணவர்களுக்கு அடி, உதை, தண்டனை போன்ற சித்ரவதைகள் இல்லை என்றாலும், குழந்தைகளுக்குப் பள்ளி செல்ல பிடிப்பதே இல்லை.

ஏனென்றால், நம் கல்வி முறை மதிப்பெண் அடிப்படையில் கட்டியமைக்கப்பட்டுள்ளது. மழலையர் பள்ளியிலே யாருக்கு அதிக ஸ்டார்... யாருக்கு அதிக திறமை போன்ற ஒப்பீடுகள் குழந்தைகளை சோர்வடைய வைக்கின்றன. பள்ளிக்குச் செல்வதைவிட வீட்டிலேயே இருக்கலாம் என்று எண்ண வைக்கிறது. இன்றைய வாழ்க்கை சூழலில் கல்வி அறிவில்லாமல் ஒரு குழந்தை வளர்வதற்கு சாத்தியமில்லை. எனவே ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கு போகத்தான் வேண்டும்.

ஆனால், குழந்தைகள் மகிழ்ச்சி பொங்க பள்ளிக்குப் போக வாய்ப்பே இல்லையா? உலகம் முழுவதும் இப்படித்தான் குழந்தைகள் சலிப்புடன் பள்ளிக்குச் செல்கிறார்களா..?

இல்லை. இன்று, உலகில் தலைசிறந்த கல்வியில் பின்லாந்து முதல் இடத்தில் உள்ளது. அங்கு குழந்தைகள் சந்தோஷமாக பள்ளிக்குச் செல்வதாக புள்ளிவிபரங்கள் சொல்கின்றன.

அங்கு மட்டும் எப்படி மகிழ்ச்சி சாத்தியமாகிறது..?

பின்லாந்தில் ஏழு வயதில்தான் ஒரு குழந்தை பள்ளிக்குச் செல்லத் தொடங்குகிறது. நம் நாட்டை போன்று ஒன்றரை வயதில் ப்ளே ஸ்கூல், இரண்டரை வயதில் ப்ரீ-கே.ஜி.., மூன்று வயதில் எல்.கே.ஜி., நான்கு வயதில் யு.கே.ஜி என்ற அவசரக்கல்வி முறை

www.gyanaguru.com
www.gyanaguru.com



அந்த நாட்டில் இல்லை.

பள்ளியில் பாடத்திட்டம் என்பது பள்ளியறையில்தான் தொடங்குகிறது. தன்னைச் சுற்றியுள்ள ஒவ்வோர் அசைவில் இருந்தும் ஒவ்வோர் ஒலியில் இருந்தும் குழந்தை பாடம் கற்கிறது. இலை உதிர்வதும், செடி துளிர்ப்பதும், இசை ஒலிப்பதும், பறவை பறப்பதும் குழந்தைக்குக் கல்விதான். எனவே பாடப்புத்தகம் என்ற சுமை கிடையாது. ஏழு வயதில் பள்ளிக்குச் செல்லும் பின்லாந்து குழந்தை, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு கிட்டத்தட்ட ஆண்டின் பாதி நாட்கள்தான் பள்ளிக்கூடம் செல்கிறது. மீதி நாட்கள் விடுமுறை.

ஒவ்வொரு நாளும் பள்ளி இயங்கும் நேரமும் குறைவு தான். அந்த நேரத்திலும்கூட, படிப்புக்குக் கொடுக்கப்படும் அதே முக்கியத்துவம் இசை, ஓவியம், விளையாட்டு, போன்ற பிற கலைகளுக்கும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பள்ளியிலும் ஓர் ஓய்வறை கட்டாயம். படிக்கப் பிடிக்கவில்லை அல்லது சோர்வாக இருக்கிறது என்றால், மாணவர்கள் அங்கு சென்று ஓய்வு எடுக்கலாம். முக்கியமாக, 13 வயது வரை ரேங்கிங் என்ற மாணவர்களை தரம் பிரிக்கும் கலாச்சாரம் கிடையாது. பிராக்ரஸ் ரிப்போர்ட் கார்டு கொடுத்து, பெற்றோரிடம் கையெழுத்து வாங்கி வரச் சொல்லும் வன்முறை கிடையாது...

தங்கள் பிள்ளையின் கற்றல் திறன் குறித்து தெரிந்துகொள்ள வேண்டும் என பெற்றோர்கள் விரும்பினால், தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். கற்றலில் போட்டி கிடையாது என்பதால், தேர்வுகளில் அதிக மதிப்பெண் எடுக்கும் மன உளைச்சல்கள் மாணவர்களுக்கு இல்லை...

சக மாணவர்களைப் போட்டியாளர்களாகக் கருதும் மனப்பாங்கும் இல்லை. மேலும், இவர்களுக்கு வீட்டுப்பாடம் தரப்படுவது இல்லை. மாணவர்களுக்கு எந்தப் பாடம் பிடிக்கிறதோ அதில் இருந்து அவர்களே வீட்டுப்பாடம் செய்து வரலாம், வராமலும் இருக்கலாம்.

ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு மருத்துவர் இருப்பார். அவர், மாணவர்களின் உடல்நிலையை தனிப்பட்ட முறையில் கவனித்து ஆலோசனைகள் வழங்குவார்.

ஒரு பள்ளியில் அதிகபட்சமாக 600 மாணவர்கள் இருக்கலாம்; அதற்கு அதிக எண்ணிக்கை கூடவே கூடாது. முக்கியமாக பின்லாந்தில் தனியார் பள்ளிக்கூடமே கிடையாது. அங்கு கல்வி என்பது முழுக்க முழுக்க அரசின் வசம். எனவே கான்வென்ட் கலாசாரம் இல்லை. கோடீஸ்வரராக இருந்தாலும், நடுத்தர வர்க்கத்தினராக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும், அனைவரின் குழந்தைகளும் ஒரே பள்ளியில் தான் படிக்க வேண்டும். அனைவருக்கும் சம தரமுள்ள கல்வி என்ற உத்தரவாதம் உள்ளது.

அதனால்தான் பின்லாந்தில் 99 சதவிகிதம் குழந்தைகள் ஆரம்பக் கல்வியைப் பெற்றுவிடுகின்றனர். அதில் 94 சதவிகிதம் பேர் உயர்கல்விக்குச் செல்கின்றனர். 'டியூஷன்'என்ற அருவருப்பான கலாச்சாரம், அந்த நாட்டுக்கு அறிமுகமே இல்லை...

ஆனால், தேர்வுகளை அடிப்படை முறைகளாக இல்லாத இந்தக் கல்வி முறையில் பயின்றுவரும் மாணவர்கள்தான், உலகளாவிய அளவில் நடைபெறும் பல்வேறு தேர்வுகளில் முதல் இடங்களைப் பிடிக்கின்றனர்...

இது எப்படி சாத்தியமாகிறது?

இந்த கேள்விக்கான விடையை, ஐ.நா சபையின் ஆய்வு அவிழ்த்தது. ஆம், பின்லாந்து மாணவர்கள் மகிழ்ச்சியான மனநிலையில் கல்வி பயில்கிறார்கள் என்பதுதான் அந்த விடை. மகிழ்ச்சியின் நறுமணத்தில் திளைக்கும் குழந்தைகள், அறிவை ஆர்வத்துடன் கற்றுத் தேர்கிறார்கள்.

இத்தகைய சிறப்புகள் குறித்து அறிந்து வருவதற்காக, உலகமெங்கும் உள்ள கல்வியாளர்களும், பிரதிநிதிகளும் அந்த நாட்டை நோக்கிக் குவிகின்றனர். உலகின் 56 நாடுகளில் இருந்து 15,000 பிரதிநிதிகள் ஒவ்வோர் ஆண்டும் செல்கின்றனர். நாட்டின் அந்நியச் செலாவணியில் கணிசமான சதவிகிதம் கல்விச் சுற்றுலாவின் மூலமே வருகிறது.

ஆனால், இப்படி தங்களை நோக்கி வீசப்படும் புகழ் மாலைகளை பின்லாந்தின் கல்வியாளர்களும் அமைச்சர்களும் ஓடோடி வந்து ஏந்திக்கொள்வது இல்லை. அதற்கு அவர்கள் சொல்லும் காரணம், 'பின்லாந்து கல்வி முறைதான் உலகிலேயே சிறந்தது எனச் சொல்ல முடியாது... ஏனெனில், இதற்காக நடத்தப்பட்ட ஆய்வில் எல்லா உலக நாடுகளும் பங்கேற்கவில்லை. எனவே, இப்படி ஒரு முடிவை ஏற்றுக் கொள்ள முடியாது... எங்களைவிட சிறந்த கல்விமுறையும் இருக்க வாய்ப்பு உள்ளது" என்கிறார்கள் பெருந்தன்மையுடன்.

> “
>
> பின்லாந்தில் ஆசிரியர் பணி என்பது, நம் ஊர் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் போல மிகுந்த சமூகக் கௌரவம் உடையது. அரசின் கொள்கை வகுக்கும் முடிவுகளில், திட்டங்களின் செயலாக்கத்தில் ஆசிரியர்களுக்கு முக்கியப் பங்கு உண்டு.

## மந்திரச்சொல்

ஒரு பிரச்னை ஏற்பட்டால்
மகிழ்ச்சி அடையுங்கள்.
ஏனென்றால், அது நிச்சயம்
முடிவுக்கு வரப்போகிறது.

அதேநேரம், பின்லாந்தில் ஆசிரியர் பணி என்பது, நம் ஊர் ஐ.ஏ.எஸ் ., ஐ.பி.எஸ் போல மிகுந்த சமூகக் கௌரவம் உடையது. அரசின் கொள்கை வகுக்கும் முடிவுகளில், திட்டங்களின் செயலாக்கத்தில் ஆசிரியர்களுக்கு முக்கியப் பங்கு உண்டு. மூன்றில் ஒரு பின்லாந்து குழந்தை, ஆசிரியர் ஆவதுதான் தன் வாழ்நாள் லட்சியம் என்று கனவு காண்கிறது.

அதே நேரம் அங்கு ஆசிரியர் ஆவது அத்தனை சுலபம் அல்ல. ஏனென்றால், மேல்நிலை வகுப்பில் சிறந்து விளங்கும் மாணவர்களில் இருந்துதான் ஆசிரியர் பயிற்சிக்கு மாணவ மாணவிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். நம் நாட்டில் மற்ற படிப்புகளில் இடம் இல்லாதவர்கள்தான் ஆசிரியர் பணிக்கு வருகிறார்கள். அப்படியின்றி, அதிக தகுதியுடைய மாணவர்களை ஆசிரியராக்குகிறார்கள். ஆசிரியராவதற்கு ஐந்து ஆண்டுகள் உண்டு, உறைவிடப் பள்ளிகளில் சேர்ந்து கடும் பயிற்சி எடுக்க வேண்டும். அதன்பிறகு, ஆறு மாத காலம் ராணுவப் பயிற்சியும் உண்டு.

அதன்பிறகு, ஒரு வருடத்துக்கு வெவ்வேறு பள்ளிகளில் நேரடியாக வகுப்பறையில் ஆசிரியர் பயிற்சி. ஏதாவது ஒரு பாடத்தில் ஆய்வுக் கட்டுரை வெளியிடுவதும், குழந்தை உரிமைப் பயிலரங்கங்களில் பங்கேற்பதும் முக்கியம். மேலும், நாட்டின் சட்ட திட்டங்கள் குறித்த தெளிவுக்காக தேசிய அமைப்புகளிடம் இருந்து சான்றிதழ் பெற வேண்டும். அது மட்டுமின்றி தீயணைப்பு, தற்காப்புப் பயிற்சி, முதலுதவி செய்வதற்கான மருத்துவச் சான்று என ஆசிரியர் பயிற்சிக்கு சுமார் ஏழு வருடங்களைச் செலவிட வேண்டும்...

இப்படி ஆசிரியர்களை உருவாக்கும் விதத்தில் பின்லாந்து மேற்கொள்ளும் சமரசம் இல்லாத முயற்சிகள்தான், அங்கு கல்வியில் மாபெரும் மறுமலர்ச்சியை உருவாக்கி இருக்கிறது.

பின்லாந்து நாடு பின்பற்றுவதுதான் சரியான கல்வி முறை என்று சொல்லிவிட முடியாது என்றாலும், நம் நாட்டில் இருக்கும் பல்வேறு பாடத்திட்டங்களை விட இது உயர்வான ஒன்று என உறுதியாகச் சொல்ல முடியும். எனவே, இந்திய அரசும் பின்லாந்து பாடத்திட்டத்தை நோக்கி முன்னெடுத்துச் செல்வதுதான், நல்ல குழந்தைகளை உருவாக்கும்.

அந்த குழந்தைகள்தான் மகிழ்ச்சியாக இருப்பார்கள். அவர்களின் மகிழ்ச்சி குடும்பத்தை அழகாக்கும். மகிழ்வான குடும்பம்தான் வன்முறை இல்லாத சந்தோஷமான நாட்டை உருவாக்கும்.

# மகிழ்ச்சி பரப்ப வாருங்கள்....























www.gyanaguru.com



இன்று நம் மக்களுக்கு உணவு முதல் பொழுதுபோக்கு வரை எல்லாமே எளிதாகக் கிடைக்கிறது. ஆனால், மகிழ்ச்சியும் நிம்மதியும் தான் கிடைப்பதாக இல்லை. ஒரு புத்தகம் அல்லது உரையாடல் மூலம் யாருக்கும் முழு மகிழ்ச்சியைக் கொடுத்துவிட முடியாது என்றாலும், அதனை நோக்கி நகர முடியும். அதற்கான ஒரு முயற்சியாகத்தான், 'ஞானகுரு மகிழ்ச்சி' மாத இதழும், gyanaguru.com இணையதளமும் இயங்கிவருகின்றன.

வணிக நோக்கமற்று செயல்பட்டுவரும் இந்த இதழும் இணையமும் தொடர்ந்து செயல்படுவதற்கு நீங்களும் உதவி செய்ய முடியும். இந்த மின்னிதழை உங்களுக்குத் தெரிந்த அனைவருக்கும் ஒவ்வோர் இதழையும் பகிருங்கள், அவர்களையும் பகிரச் செய்யுங்கள்.

மேலும், இந்த இதழுக்கு ஏற்ப உங்களுடைய சொந்த படைப்புகளை அனுப்பிவையுங்கள். தகுதியிருப்பின் அவை உங்கள் பெயரில் பிரசுரம் செய்யப்படும்.

இதுதவிர, நீங்கள் விரும்பும் ஏதேனும் ஒரு சிறு தொகையை அன்பளிப்பாக கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணுக்கு ஜிபே மூலம் அல்லது கீழ்க்கண்ட வங்கி எண்ணுக்கு அனுப்பிவைக்கலாம். இது மகிழ்ச்சிக்கு மகிழ்ச்சி தரும்.

GPAY : +91 98 8445 3014
GHANAGURU PUBLICATION, CITY UNION BANK,
CURRENT ACCOUNT No. : 036109000092054,
IFSC : CIUB0000036.



www.gyanaguru.com

# கொலை செய்ய விரும்பு!



கடுமையான கோபத்துடன் ஆசிரமத்துக்கு வந்தார் மகேந்திரன். ‘இன்று என் கண் முன்னே ஒருவன் பெண்ணை சீண்டினான். அங்கேயே அவனை அடித்துக்கொல்ல வேண்டும் என்பது போன்று ஆத்திரம் வந்தது. ஆனால், என்னால் அடிக்க முடியாது என்பதால் வந்துவிட்டேன். ஏன் எனக்கு ஒருவனை கொல்லும் அளவுக்கு வன்முறை சிந்தனை ஏற்பட்டது” என்று கேட்டார் மகேந்திரன்.

‘‘மனிதனுக்கும் விலங்குக்கும் பெரிய வித்தியாசங்கள் கிடையாது. அதனால், வன்முறை மனிதனின் ரத்தத்தில் கலந்துதான் இருக்கிறது. அடித்து வளர்ப்பதுதான் நல்ல குழந்தை வளர்ப்பு என்று நம்புகிறோம். கணவன், மனைவி அடிக்கடி சண்டை போடுவதும், அடித்துக்கொள்வதும் வன்முறை மீதான விருப்பம்தான். இன்று உலகம் முழுவதும் சண்டை படங்களுக்குத் தான் அதிக வரவேற்பு இருக்கிறது. அதனால் உனக்கு திடீரென ஒருவனை கொலை செய்யும் அளவுக்கு வன்மம் தோன்றுவதில் ஆச்சர்யம் இல்லை”

‘‘இப்படி ஒரு சிந்தனை வருவது பாபம் இல்லையா?”

“ஒருவனை கொலை செய்யவேண்டும் என்ற சிந்தனையே, கொலை செய்வதற்கு ஒப்பானதுதான். அநியாயத்தைக் கண்டால் தட்டிக் கேட்பது நல்ல குணம். அதற்கும் வன்முறைக்கும் எந்த தொடர்பும் இல்லை. நீ தவறு செய்தவனை வெல்ல வேண்டும் என்பது முக்கியம் அல்ல. அவன் செய்தது தவறு என்பதை சுட்டிக்காட்டுவதும், தட்டிக் கேட்பதும்தான் முக்கியம்.

ஆனால், உனக்கு அதை செய்வதற்கு அச்சம். காயம் ஏற்படலாம், உடல் உறுப்புகள் சேதம் அடையலாம், ஏன் உயிர் போகலாம் என்ற பயம் காரணமாக அங்கிருந்து ஓடி வந்துவிட்டாய். அதேநேரம், உன் வசதிப்படி அவனை மனதால் கொல்ல நினைக்கிறாய். இந்த வன்முறை நாளை உன்னைவிட எளிய மனிதரிடம் நிச்சயம் வெளிப்படவே செய்யும்.

உன்னைச் சேர்ந்த மனிதர்களை இந்த வன்முறை சிந்தனை காயப்படுத்திவிடும். ஆகவே, வன்முறையை அன்பாக மாற்றுவதற்கு முயற்சி செய். கண்ணுக்கு முன்னே அநியாயம் நடந்தால் உன்னால் முடிந்தால் தட்டிக் கேள். இல்லையென்றால், இயற்கை பார்த்துக்கொள்ளும் என்று விலகிவிடு. நீ கொலை யாளியாக மாறாதே” என்றார் ஞானகுரு.

மனதில் இருந்த வன்மம் குறைவதை உணர்ந்தார் மகேந்திரன்.

# தவறு செய்ய ஆசை வருகிறதா..?



சினிமா நட்சத்திரங்களைப் பார்த்து ஏங்காதவர்கள் யாருமில்லை. அவர்களின் அழகு, அந்தஸ்து, புகழ் போன்றவை ரசிகர்களுக்கு போதை தருகிறது. கனவு காண வைக்கிறது. அப்படியொரு நட்சத்திரத்தை திருமணம் செய்துகொண்டால் மிகவும் மகிழ்ச்சியாக வாழலாம் என்ற ஆசை வருகிறது. இப்படி ஆசைப்படுவதில் ஆண் ரசிகை, பெண் ரசிகர் என்ற பாகுபாடே கிடையாது. அதேநேரம், அவர்கள் எட்டிப்பிடிக்க முடியாத உயரத்தில் இருக்கிறார்கள் என்ற உண்மையும் ரசிகர்களுக்குத் தெரியும். எனவே, நட்சத்திரம் மீதான ஆசை நிறைவேறாது என்பது ரசிகர்களுக்குத் தெரிந்தே இருக்கும். எனவே ஒரு நடிகர் அல்லது நடிகையை ரொம்பவும் பிடிக்கும் என்று சொல்வதை யாரும் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை.

நிஜ வாழ்க்கையிலும், திருமணம் முடித்த ஆணுக்கும் பெண்ணுக்கும் மனம் அவ்வப்போது சஞ்சலப்படுவதுண்டு. கணவன், மனைவிக்குள் எவ்விதமான மோதல் அல்லது முரண்பாடு இல்லாத நேரத்திலும் வேறு ஓர் ஆண் அல்லது பெண் மீது ஆர்வம் தோன்றுவது இயற்கைதான். காதலித்து திருமணம் செய்தவர்கள், குழந்தை பெற்றவர்கள், பொறுப்பான பதவிகளில் இருப்பவர்களுக்கும் இதில் விதிவிலக்கு இல்லை.

www.gyanaguru.com
www.gyanaguru.com

இத்தனை வயதுக்குப் பிறகு, குழந்தை பெற்றபிறகு இப்படிப்பட்ட கெட்ட எண்ணம் வருவதே தவறு என்று மனதை அடக்க அடக்க... எதிர் பாலினம் மீது ஆர்வம் அதிகமாகுமே தவிர, குறையவே செய்யாது.

அப்படியென்றால் என்னதான் தீர்வு..? தவறு என்று தெரிந்தும் மனதில் தோன்றும் ஆசைகளை எப்படி கட்டிப்போடுவது. உளவியல் மருத்துவர் சொல்லியிருக்கும் புதிய வழியை படித்துப் பாருங்கள்.

நகரின் பிரபலமான தனியார் கல்லூரி ஒன்றில் நடுத்தர வயது பேராசிரியர் ஒருவர் புதிதாக பணியில் சேர்ந்தார். திருமணம் முடித்து, குழந்தைகளுடன் அந்த நகருக்கு வந்திருக்கிறார். அதற்கு முன்பு அவர் தென் தமிழகத்தில் இருந்த ஒரு சாதாரண கல்லூரியில் பணி புரிந்தவர்.

புதிய கல்லூரியில், அவரது வகுப்பு மாணவிகள் பெரும்பாலோர் மேல்தட்டு வர்க்கத்தினர். எனவே, ஒவ்வொரு மாணவியும் ஸ்டைலாகவும், தனி ஆளுமையுடனும் இருந்தனர். அந்த மாணவிகளின் துடுக்கான பேச்சு, ஸ்டைலான கல்ச்சர், டோன்ட் கேர் பாலிஸி போன்றவை பேராசிரியருக்குப் புதிது. எனவே, ஒவ்வொரு மாணவியும் அவரை ஏதோ ஒரு ரீதியில் அவரது மனதை பாதித்தனர். எனவே, அந்த மாணவிகளிடம் பேசுவதற்கு அதிக ஆர்வம் காட்டினார். ஆனால், அவரது பேச்சு, நடவடிக்கையை மாணவிகள் இயல்பாகவே எடுத்துக்கொண்டனர். சிம்பிளாக பேராசிரியர் தொட்டுப் பேசுவதைக்கூட அவர்கள் கண்டுகொள்ளவில்லை. ஆனால், அந்த தொடுகை பேராசிரியருக்குப் பேரானந்தமாக இருந்தது. நினைத்தாலே இன்பமாக இருந்தது.

அதேநேரம், அவருக்கு பயமும் வந்தது. எந்த நேரத்திலும் எல்லையை மீறிவிடலாம் என்ற அச்சம் ஏற்பட்டது. எனவே, மாணவிகளை கண்டுகொள்ளாமல் தவிர்க்க நினைத்தாலும், அவரால் அது முடியவில்லை. அவரது கனவில்கூட மாணவிகள் வந்து டூயட் பாடினார்கள்.

நாளுக்கு நாள் இந்த பிரச்னை அதிகமாகவே, உளவியல் மருத்துவரை சந்தித்தார். இரவும் பகலும் மாணவிகளின் நினைப்பு தன் மனதில் வந்து சஞ்சலப்படுத்துவதை சொன்னார். ஒரு ஆசிரியர் ஸ்தானத்தில் இருந்துகொண்டு, மாணவிகளை பற்றி நினைப்பது தவறு என்று தெரிந்தாலும், நினைப்பை தடுக்க முடியவில்லை. அதேநேரம், குற்ற உணர்ச்சியுடன் வாழ்வதும் உண்மை என்று சொன்னார்.

பேராசிரியர் சொன்னதை முழுமையாக கேட்டுக்கொண்ட உளவியல் மருத்துவர், ஒரு தீர்வை முன்வைத்தார். அதாவது, அவரது வகுப்பில் படிக்கும் ஒவ்வொரு மாணவியின் பெயரையும், அந்த மாணவி பற்றி என்ன



> ஒரு வேளை அதிகத் தூண்டுதலில் நான் எதையாவது செய்வதற்கு முயற்சித்தால், அதற்கான விளைவுகள் எப்படியெல்லாம் இருக்கும் என்பதும் என் மனதில் தோன்றிவிட்டது.



தோன்றுகிறது என்பதையும் ஒரு பேப்பரில் எழுதச்சொன்னார். அந்த மாணவியைப் பற்றி நினைக்கும்போது மனதில் என்னவெல்லாம் தோன்றுகிறதோ, அவை எல்லாவற்றையும் எந்த சென்சாரும் இல்லாமல் எழுதச் சொன்னார். அந்த மாணவியுடன் நீங்கள் எப்படி இருக்க ஆசைப்படுகிறீர்கள் என்பதையும் எழுத்தில் பதிவு செய்யுங்கள் என்று சொன்னார்.

பேராசிரியர் திடுக்கிட்டுப் போனார். 'மாணவிகளை பற்றிய நினைப்பே வரக்கூடாது என்றுதான் உங்களிடம் வந்தேன். ஆனால், நீங்கள் மாணவிகளை பற்றி நினைத்து நினைத்து எழுதச்சொல்கிறீர்களே.. இது எப்படி சரியாக இருக்கும்?" என்று கேட்டார்.

அதற்கு, மனநல ஆலோசகர், 'கவலைப்படாதீர்கள். நான் சொல்கிறபடி செய்யுங்கள். ஒவ்வொரு மாணவியிடனும் உங்களது கற்பனை எந்த அளவுக்குப் போகிறது என்பதை முதலில் தெரிந்துகொள்ளுங்கள். அதன் பின் அதை யதார்த்தத்தோடு பொருத்திப் பார்த்தால் மனம் தெளிவடையும்' என்றார்.

## மந்திரச்சொல்

மான் எத்தனை அழகாக இருந்தாலும், அதனை புலி ரசிப்பதில்லை.

மனநல ஆலோசகர் அப்படிச் சொன்னதும் ஆசிரியருக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனாலும் மருத்துவர் சொல்வதைக் கேட்க முயன்றார். அப்படி அந்த பேராசிரியர் எழுத தொடங்கினார். எழுத, எழுத பேராசிரியருக்கு பல உண்மைகள் தெரியவந்தன. ஆலோசகரிடம் மனம் திறந்து பேசினார்.

"நீங்கள் சொன்னீர்கள் என்பதால் என் மனதை அதிகம் சஞ்சலப் படுத்திய பெண்ணைப் பற்றி எழுத ஆரம்பித்தேன். மனதை அதன் போக்கில் போக விட்டேன். அப்போதுதான், நான் நினைப்பது எல்லாம் வெறும் கற்பனையாக மட்டும்தான் இருக்க முடியுமே தவிர, நிகழ்காலத்தில் எதுவும் நடக்காது என்ற உண்மை எனக்குப் புரிந்தது.

ஒரு வேளை அதிகத் தூண்டுதலில் நான் எதையாவது செய்வதற்கு முயற்சித்தால், அதற்கான விளைவுகள் எப்படியெல்லாம் இருக்கும் என்பதும் என் மனதில் தோன்றி விட்டது. இப்போது எனக்கு மாணவிகளைப் பற்றிய கற்பனை நின்று போனது. இவை எல்லாமே வீண் சிந்தனை, எதுவுமே உண்மை அல்ல என்பதை புரிந்துகொண்டேன். இனி மாணவிகளைப் பார்த்தாலும், பேசினாலும் தடுமாற்றம் வராது" என்றார் உறுதியுடன்.

உடனே மன நல ஆலோசகர், 'நீங்கள் ஒரு விஷயத்தை நினைக்கக்கூடாது என்று தடை விதித்தால், அதைத்தான் நினைத்துக்கொண்டே இருப்பீர்கள். எனவே, தடையின்றி நகர்ந்து பார்க்கச் சொன்னேன். உங்களுக்கு உண்மை புரிந்துவிட்டது. அடுத்த தலைமுறைப் பெண்களின் சிந்தனை, செயல்பாடுகளை வேடிக்கை பார்க்க மட்டும் கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கை வேறு, அவர்கள் வாழ்க்கை வேறு..." என்றார்.

இதைத்தான் ஜே. கிருஷ்ணமூர்த்தி, "மனம் சஞ்சலப்பட்டால் தடுக்காதீர்கள். அதன் போக்கில் போக விடுங்கள். அதன் வீச்சைக் கண்டறியுங்கள். தடுமாற்றங்கள் முழுதுமாகப் புரிந்து கொள்ளப் பட்டால் அது மறைந்துவிடும்" என்று கூறினார்.

சிறு வயதிலிருந்து பெற்றோர், ஆசிரியர்கள் நமக்கு பல்வேறு அறிவுரைகள், வழிகாட்டுதல்களை வழங்குகிறார்கள். சடங்குகள், சம்பிரதாயங்கள், மரபுகளுடன் சேர்ந்து வளர்கிறோம். எனவே நம்மை அறியாமலே நம் வாழ்க்கைப் பதிவுகள் நமது மனதிலேயே தங்கியிருக்கும். நம்மை அறியாமலே அந்த உணர்வுகளைத்தான் வெளிப்படுத்தி வருகிறோம். மூக்குக் கண்ணாடி போட்டிருப்பவருக்கு, ஒரு கட்டத்தில் கண்ணாடி வழி பார்க்கிறோம் என்ற உணர்வே மறந்துவிடும். அப்படித்தான் நம் மனதில் இருக்கும் பதிவுகள் வழியாகத்தான், நல்லது, கெட்டது, நியாயம், அநியாயம் என்பதை நாம் பிரித்துப் பார்க்கிறோம். எனவே, இதுதான் சரி என்று நிச்சயமாக எதுவும் கிடையாது.

ஒருவருக்கு அநியாயமாகத் தெரிவது, ஒருவரது நியாயமாகத் தெரியும். அதனால், மனம் தடுமாறினால், அதன் போக்கில் முழுமையாக செல்ல விடுங்கள். அப்போதுதான், அடுத்து நீங்கள் செய்ய வேண்டியது எதுவென தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.




## ? மகிழ்ச்சியோடு வாழ என்ன செய்யவேண்டும்?

**- எஸ்.கௌரி வடிவேல், ராமநாதபுரம்.**

**ஞானகுரு :**

தேன், மாம்பழம் போன்றவை இனிப்பானவை மட்டுமின்றி சுவையும் சத்துக்களும் மிகுந்தவை. அதற்காக மூன்று நேரமும் இவற்றை மட்டுமே சாப்பிட முடியாது. அதனால் மகிழ்ச்சியாக மட்டுமே வாழவேண்டும் என்ற சிந்தனையே தவறு. மகிழ்ச்சி என்பது வாழ்க்கையின் ஓர் அங்கமாக இருக்க வேண்டுமே தவிர, வாழ்க்கை முழுவதும் மகிழ்ச்சி மட்டுமே நிரம்பியிருக்கக் கூடாது. பைத்தியக்காரர்களால் மட்டும்தான் எப்போதும் சிரித்துக்கொண்டே இருக்க முடியும். மகிழ்ச்சி, துன்பம், கோபம், சண்டை, சமாதானம், ஊடல், கூடல் என எல்லாம் கலந்ததுதான் வாழ்க்கை. துன்பங்களையும் தோல்விகளையும் எளிதாக எடுத்துக்கொண்டு வாழ்வதுதான் மகிழ்ச்சியான வாழ்வு.



## ? மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரமா?

**- பி.ராஜேஸ், சாத்தூர்.**

**ஞானகுரு :**

இறைவனை கல்யாண புரோக்கர் ரேஞ்சுக்கு அவமானப்படுத்த வேண்டாம். நீ நல்ல கணவன் என்றால், நல்ல மனைவி அமைவாள் அல்லது அவள் நல்லவளாக மாறிவிடுவாள். நீ ஏமாற்றுக்காரன் என்றால், பெண் உன்னைவிட நூறு மடங்கு சாகசம் செய்வாள் ஜாக்கிரதை.

## ? வாழ்வில் இன்பத்தைவிட துன்பமே அதிகம் வருவது ஏன்?

**- எஸ்.புவனேஸ்வரன், பாண்டிச்சேரி**

**ஞானகுரு :**

துன்பத்தைவிட, துன்பம் வந்துவிடுமோ என்ற அச்சம்தான் பலருடைய இன்பத்தை கபளீகரம் செய்துவிடுகிறது. தவறி கீழே விழுவதை குழந்தை தோல்வியாக அல்லது அவமானமாக கருதுவதில்லை. மீண்டும் மீண்டும் விழுந்து எழுந்து நடக்கிறது. ஆனால் வளர்ந்தவுடன் துன்பத்தையும் துக்கத்தையும் கண்டு மனிதன் அச்சப்படுகிறான். அதனைத் தாண்டி செல்வதற்குத் தயங்குகிறான்.



## ? பலருக்கும் படிப்புக்கு ஏற்ற வேலை கிடைப்பதில்லை, பிறகு படிப்பு எதற்காக?

**- ஏ.கண்ணன், சென்னை**

**ஞானகுரு :**

படிப்பு என்பது அறிவை பெருக்க, அறியாமை அகற்ற என்ற உண்மைகூட புரியாதவனுக்கு வேலை கிடைத்தால் என்ன, கிடைக்காவிட்டால் என்ன..?



www.gyanaguru.com



# ஞானகுரு பதில்கள்



## ? முகத்தைப் பார்த்து ஒருவரின் வாழ்க்கையைக் கணிக்க முடியுமா?

**- ஏ.சுந்தரி, லட்சுமி நகர்.**

**ஞானகுரு :**

பெருவிரல் ரேகையைப் பார்த்து ஜோதிடம் சொல்கிறான். கையெழுத்தைப் பார்த்து ஜோதிடம் சொல்கிறான். இன்னும் சிலர் கையில் எந்த ஆதாரமும் இல்லாமல் நாடி ஜோதிடம் சொல்கிறான். அப்படியிருக்கும்போது ஒருவரின் முகத்தைப் பார்த்து கணிக்க முடியாதா என்ன? ஜோதிடன் நினைத்தால் உன் மூச்சுக் காற்றில் இருந்தும் ஆருடம் சொல்வான். உன்னையே உன்னால் கணிக்க முடியாது என்பதுதான் உண்மை, பிறகு எப்படி வேறு ஒருவரால் அது முடியும் என நினைக்கிறாய்..?

## ? சித்தர்கள் இந்த உலகில் வாழ்கிறார்களா..?

**- எம்.பாலாஜி, பொள்ளாச்சி.**

**ஞானகுரு :**

சித்தாளைத் தேடுவதுபோல் தேடினால் சித்தர்களைக் காண முடியாது. நீயே சித்தனாக மாறிப் பார், உன்னைச் சுற்றிலும் ஆயிரம் சித்தர்களை தரிசிக்க முடியும்.





## ? பதவி, அதிகாரம் இருந்தும் நம் நாட்டை வல்லரசாக மாற்ற முடியவில்லையே..?

**- கே.பிருந்தா, திருநெல்வேலி.**

**ஞானகுரு :**

நாடு என்பது மனிதர்களுக்கானது. ஒவ்வொரு மனிதனும் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு என்ன வழி என்பதை அரசு தேடினால் அந்த நாடு நல்ல நாடாக இருக்கும். மனிதர்களைவிட நாடுதான் நன்றாக இருக்கவேண்டும் என்று நினைத்தால், ஒருசிலர்தான் மகிழ்ச்சியாக இருப்பார்கள். அதற்குத்தான் ஆசைப்படுகிறார்கள், நம் அரசியல்வாதிகள்.

## ? மனிதர்களை இயக்கும் சக்தி எது?

**- டி.மோகனா, மன்னார்குடி**

**ஞானகுரு :**

நம்பிக்கையின் பிடியில்தான் மனிதன் இயங்குகிறான். சிலருக்கு கடவுள் நம்பிக்கை, சிலருக்கு பணம், உறவு, நட்பு மீது நம்பிக்கை. இன்றைய பொழுதைவிட, நாளை சிறப்பாக விடியும் என்ற நம்பிக்கைதான் மனிதனை காட்டுக்குள் இருந்து நாகரிகத்திற்கு கூட்டிவந்துள்ளது.



## ? எல்லோருக்கும் நல்லவனாய் வாழமுடியுமா?

**- பி.சரவணகுமார், காரியாபட்டி.**

**ஞானகுரு :**

உனக்கு மட்டும் நீ நல்லவனாக இருந்தால் போதும். உனக்குள் உலகமே அடக்கம். உலகத்தில் நீயும் அடக்கம்.

www.gyanaguru.com




**?** மரணம் இல்லையென்றால் உலகம் எப்படியிருக்கும்?

**- டி.தனலட்சுமி, தஞ்சாவூர்.**

**ஞானகுரு :**

கொடுமையாக இருக்கும். முடிவு இல்லாத கதையைப் படிக்க யாருமே விரும்புவதில்லை. மரணத்துக்குள் சம்பாதிக்க வேண்டும், மரணத்திற்குள் சாதிக்க வேண்டும் என்ற எல்லைக்கோடு இல்லையென்றால், யாரும் யாருக்காகவும் உழைக்க மாட்டார்கள். காதலும் கலவியும் அர்த்தமற்றுப் போகும். குழந்தை பிறப்பு சாபமாக கருதப்படுமே தவிர, வரமாக இருக்காது. கடவுளே மரணம் கொடு என்று மனிதன் தவம் இருப்பான். மரணம் இனிமையானது என்ற எண்ணத்தை வளர்த்துக்கொள், வாழ்க்கை சுகமாக இருக்கும்.

# ஞானகுரு பதில்கள்



**?** இறைவனை எப்படி வணங்கவேண்டும்?

**- பி.வந்தனாராஜன், லட்சுமி நகர்**

**ஞானகுரு :**

அன்பைத்தவிர பிள்ளையிடம் இருந்து எதனையும் அன்னை எதிர்பார்ப்பதில்லை. பெற்றவளே கேட்காத போது... படைத்தவன் என்ன கேட்கப் போகிறான்? சுய நலமற்ற நல்லவனாக இரு. அதுதான் படைத்தவனுக்கும் ஈன்றவளுக்கும் நீ செய்யும் சரியான வழிபாடு.

**?** என்னிடம் எல்லாம் இருக்கிறது. ஆனால், எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லையே?

**- எஸ்.சுந்தரம், திருப்பூர்.**

**ஞானகுரு :**

எது கிடைத்தாலும் மகிழ்ச்சி அடையமாட்டேன் என்ற எதிர்மறை மனநிலையில்தான் மனிதன் வாழ்ந்து கொண்டு இருக்கிறான். இரண்டாம் பரிசு கிடைத்தவன் அதற்காக திருப்தி அடையாமல், நூலிழை வித்தியாசத்தில் முதல் பரிசை இழந்துவிட்டதற்காக வருத்தப்படுகிறான். ஆசைப்பட்டு வாங்கிய துணியில் இருந்து காதலித்து கட்டிக்கொண்ட கணவன், மனைவி வரையிலும் யாரும் இருப்பதைக்கொண்டு திருப்தி அடைவதில்லை. கிடைத்திருப்பது எல்லாம் வரம் என்று நம்பு. வெற்றி, தோல்வி என்று வாழ்க்கையில் எதுவும் கிடையாது. எல்லாமே அனுபவம் என்று எடுத்துக்கொள். வாழ்க்கை இனிமையாகத் தெரியும்.



**?** நாம் சேர்க்கும் சொத்து பிள்ளைகளுக்கு உதவுமா?

**- பாலசுப்பிரமணியன், முல்லை நகர்.**


**ஞானகுரு :**

தனக்காக அப்பா நிறைய செய்யவேண்டும் என்று ஒவ்வொரு மகனும் எதிர்பார்க்கிறான். அவனே தந்தையானதும் மகனுக்கு நிறைய நிறைய செய்கிறான். ஆனால் எந்தப் பிள்ளையும் தகப்பன் தனக்கு நிறைய செய்திருக்கிறான் என்று ஒப்புக்கொள்வதில்லை. அதனால் உன் வாழ்க்கையை மட்டும் நீ பார். உன் மகன் காட்டு மரம் போன்று தானே வளரட்டும்.







# கவித்துவம்

**நடக்க முடியாமல்**
**வழிமுனியப்பன் கோவில்**
**நிழலில் அமர்ந்தேன்.**
**அங்கே அசைய முடியாமல் நின்ற**
**குதிரைச் சிலைக்கு**
**இமைக்க முடியாத கண்கள்.**
**இப்படித்தான் எப்போதும்.**
**நமக்கு ஆறுதல் தருவோரிடம்**
**ஆயிரம் துயர்கள்.**

**– மகுடேசுவரன்**

# விவாகரத்தின் மறுபக்கம்

# பேரன்பு...!



‘மனசுக்குப் பிடிக்கவில்லை என்றால் விவாகரத்து வாங்கி விடு’ என்று பேசுவது இந்த காலத்தில் சர்வ சாதாரணமாகி விட்டது. இதுவும் வாழ்க்கையின் ஒரு பகுதிதான் என்பதை ஏற்றுக்கொண்டதால், நீதிமன்றத்தில் தினமும் விவாகரத்து வழக்குகள் குவிந்துகொண்டிருக்கின்றன.

திருமணத்திற்குப் பிறகு தாங்கமுடியாத கொடுமைகளை அனுபவிக்கும் பெண்களுக்கும், ஆண்களுக்கும் விவாகரத்து தான் தீர்வு என்பதில் மாற்றுக்கருத்தே இல்லை. ஆனால், இன்றைய பெரும்பாலான விவாகரத்துக்குக் காரணமாக இருப்பது ஈகோ மட்டும்தான். இன்னொரு வகையில் சொல்வது என்றால் தன்னுடைய சுயநலம் மீதான பேரன்பு.

இன்றைய நிலையில், ஆணைச் சார்ந்து பெண்ணும், பெண்ணைச் சார்ந்து ஆணும் வாழவேண்டிய கட்டாயம் இல்லை என்பது பிரிவதற்கு ஒரு மிகப்பெரிய காரணமாக இருக்கிறது. முன்பு பெண் அடங்கிக்கிடந் ததற்கும், ஆணீன் கொடுமைகளை தாங்கிக் கொண்டதற்கும் இந்த சார்புதான் காரணமாக இருந்தது. ஆனால், அந்த வளையம் இப்போது உடைந்துவிட்டது.

‘உனக்கு கை நிறைய சம்பளம். உன்னையும் உன் பிள்ளைகளையும் நீயே கவனித்துக்கொள்ள முடியும். எனவே, எதற்காக, யாருக்கும் அடங்கிப் போக வேண்டும்..? யோசிக்காமல் தைரியமாய் முடிவெடு’ என்று உறவுகளும், நட்புகளும் ஆலோசனை சொல்கின்றன. இப்படி ஆலோசனை சொல்லும் நபர்கள் யாரும், கடைசிவரை ஆதரவாக நிற்க மாட்டார்கள் என்ற உண்மையை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆனால், பணம் மட்டுமே வாழ்க்கையை மகிழ்ச்சியாக நடத்துவதற்குப் போதுமானது அல்ல. அதையும் மீறி பல தேவைகள் உடலுக்கும் மனதுக்கும் இருக்கின்றன. எனவே விவாகரத்து செய்வதாக இருந்தால், அதுவும் குழந்தைகள் பிறந்த பிறகு பிரிவது என்றால் மீண்டும் மீண்டும் யோசிக்கத்தான் வேண்டும். ஏனென்றால் பெண்ணுக்கு வேறு ஒரு கணவன் கிடைக்கலாம். ஆணுக்கு வேறொரு மனைவி கிடைக்கலாம். ஆனால் பிள்ளைகளுக்கு அவர்கள் எப்போதும் அம்மா, அப்பாவாக மாறிவிட முடியாது. காலம் முழுவதும் குழந்தைகளுக்கு ஒரு நெருடலும் வேதனையும் இருந்துகொண்டே இருக்கும். எதிர்காலத்தில் அவர்கள் ஒரு மோசமான கணவனாக அல்லது மோசமான மனைவியாக வாழ்வதற்கே வாய்ப்புகள் அதிகம். அப்படியொரு சூழலை குழந்தைகளுக்கு உருவாக்க வேண்டாம்.

பெரும்பாலான சண்டைகளுக்குக் காரணமாக இருப்பது சின்னச்சின்ன விஷயங்கள்தான். விட்டுக்கொடுத்தல் என்பதை மனிதர்கள் மறந்துவிட்டார்கள். இதற்கு காரணம், தன்னந்தனியாக வளர்வதுதான். இன்று பெரும்பாலான வீடுகளில் ஒரு குழந்தை அல்லது இரண்டு குழந்தைகளே இருக்கிறார்கள்.



www.gyanaguru.com



> பெரும்பாலான வீடுகளில் ஒரு குழந்தை அல்லது இரண்டு குழந்தைகளே இருக்கிறார்கள். எனவே அந்த குழந்தைகள் யாரும் யாருக்கும் விட்டுத்தருவதற்குத் தேவையும், அவசியமும் இல்லாமல் போய்விடுகிறது.



எனவே அந்த குழந்தைகள் யாரும் யாருக்கும் விட்டுத்தருவதற்குத் தேவையும், அவசியமும் இல்லாமல் போய்விடுகிறது.

குழந்தைகள் கேட்பதை எல்லாம் வாங்கித்தருவதற்கு பெற்றோர்கள் இருக்கிறார்கள். அதை கடமையாக நினைக்கிறார்கள். தனக்குக் கிடைக்காத எல்லாமே தங்கள் பிள்ளைக்குக் கிடைக்க வேண்டும் என்று நினைக்கிறார் கள். தங்கள் பிள்ளை ஒரு தோல்வியும் பார்க்கக்கூடாது, எல்லாமே பெஸ்ட் ஆக கிடைக்க வேண்டும் என்று நினைக்கிறார் கள். எதுவும் கிடைக்கும் என்ற சூழலில் வளரும் குழந்தை, தன்னை ஒரு முக்கியமான நபராக நினைக்கிறது. தன்னை பெற்றோரே கண்டிக்காத நிலையில், தன்னை விமர்சனம் செய்வதற்கு வேறு யாருக்கும் உரிமை இல்லை என்றே நினைக்கிறது. எனவே, தான் என்ற அகந்தையுடன் வளர்க்கிறது. இதே அகந்தையுடன் வரும் இணையுடன் இணைந்துபோக முடியாமல் தடுமாறுகிறார்கள். இருவரில் யார் பெரியவர், யார் சொல்வது சரி, யார் சொல்வதைக் கேட்க வேண்டும் என்பதில்தான் பிரச்னை உருவாகிறது. எந்த ஒரு விஷயத்திலும் புதிய நபருக்காக எதையும் விட்டுக்கொடுக்க மனம் வருவதில்லை. இதுதான், திருமணம் முடிக்கும் தம்பதியருக்குள் பெரிய பிரச்னையாக உருவெடுக்கிறது.

திருமணம் முடித்தவர்களுக்குள் ஒரு பாசப்பிணைப்பு உருவாவதற்கு குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் ஆகும் என்று மனநல ஆலோசகர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். காதலித்து திருமணம் முடித்தவர்களுக்கும் இந்த காலம் தேவைப்படுகிறது என்பதுதான் உண்மை. இருவருக்கும் இடையில் ஒரு நல்ல  பாசப்பிணைப்பு உருவாக வேண்டும் என்றால், அதற்காக கொஞ்ச காலம் காத்திருக்கத்தான் வேண்டும். சில ஆண்டுகள் காலம் பொறுமையாக காத்திருந்தால் தம்பதியருக்குள்  பேரன்பு தோன்றிவிடும். சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல் போன்றவை இயல்பாகவே உருவாகிவிடும்.

ஆனால், திருமணம் முடித்த ஆறே மாதத்தில் சகிப்புத்தன்மையை இருவரும் இழந்து விடுகிறார்கள். நான் இனி எதையும் விட்டுத்தர முடியாது, தன்னுடைய இணை மட்டுமே விட்டுத்தர வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இந்த எதிர்பார்ப்பு நிறைவேற வில்லை என்றதும் சிக்கல் ஏற்பட்டுவிடுகிறது.

பிரிவதற்கு வாய்ப்பாக பெண் விடுதலை, ஆணாதிக்கம், சுயமரியாதை போன்ற சொற்களை இளைய தலைமுறையினர் சிறப்பாக பயன்படுத்துகி றார்கள். இணைவதற்கு எடுக்கும் முயற்சிகளைவிட, உடனே விவாகரத்து பெற்று வாழ்க்கையில் இருந்து வெளியேறிவிட அதிகம் துடிக்கிறார்கள். எப்படியாவது, இந்த வாழ்க்கையில் இருந்து விடுதலை பெற்றுவிட வேண்டும் என்பது மட்டும்தான் அவர்களுக்கு குறிக்கோளாக இருக்கிறதே தவிர, அடுத்த வாழ்க்கை குறித்த அச்சம் அவர்கள் கண்களுக்குத் தெரிவதில்லை.

மீண்டும் ஏதேனும் ஒரு வாழ்க்கையை தேர்வு செய்யத்தான் வேண்டும். ஏனென்றால், தனித்து வாழ்வது ஒவ்வொரு நாளும் துயரமாக இருக்கும். யாருக்கும் பாரமாக நீண்ட நாட்கள் வாழ்ந்துவிட முடியாது. எனவே, ஏதேனும் ஒரு வாழ்க்கையை தேர்வு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். அந்த இரண்டாவது வாழ்க்கையில் மிகவும் விட்டுக்கொடுக்க வேண்டிய அவசியம் உருவாகும். எத்தனை பிரச்னை என்றாலும் சமாளிக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படும். இதற்காகத்தான் முதல் வாழ்வில் இருந்து விவாகரத்து பெற்று பிரிந்தோமா என்ற எண்ணமும் ஏற்பட்டுவிடலாம்.

ஆகவே, முதல் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளைத் தீர்க்க முயலுங்கள். ஏனென்றால், எல்லா வாழ்க்கையிலும் பிரச்னைகள் இருக்கத்தான் செய்யும். திருமணம் முடித்த நபர்தான் பிரச்னை என்றால் விவாகரத்து என்ற முடிவுக்கு வரலாம். ஆனால், வேறு சில காரணங்கள்தான் பிரச்னை என்றால், அவற்றை களைய முயற்சிக்கலாம்.

தன் கணவனிடம் தன் சுயத்தை நிரூபிக்க முடியாமல் தோல்வியுறும் பெண்,  வேறு ஒரு ஆணிடம் தன் சுதந்திரத்தை எப்படி மீட்டெடுக்க முடியும்..?


அதே போன்று ஒரு பெண்ணிடம் அன்பை பெற சக்தியற்ற ஒருவன் வேறொரு பெண்ணிடம் எப்படி அன்பை பெற்றுவிட முடியும்?

எல்லா மனிதர்களிடமும் சிறு சிறு அளவில் அல்லது பெரிய அளவிலும் குறைகள் இருக்கத் தான் செய்யும். அதனை பேரன்புடன் பார்த்தால், அந்த குறைகளுடன் அவர்களை ஏற்பது சாத்தியம்தான்.

மகிழ்ச்சியை இருக்கும் இடத்திலேயே உருவாக்கிக் கொள்வதுதான் அறிவு. அது, வேறு ஒரு இடத்தில் கிடைக்கும் என்று தேடினால், அது எங்கேயும் கிடைக்காது என்ற உண்மையை கணவனும் மனைவியும் அறிந்துகொள்ள வேண்டும்.








# பெண்ணுக்கு தடை போடுபவர் கடவுள்தானா..?

திருப்பரங்குன்றம் மலையின் மீது, இலக்கின்றி எதையோ வெறித்துக்கொண்டு இருந்த இளைஞனுக்கு அருகில் அமர்ந்தார் ஞானகுரு. அருகே வேறு ஒருவர் அமர்வதை விரும்பாத இளைஞன் சட்டென்று எழுந்து நகர முயல, அவன் கையை அன்போடு அழுத்திப் பிடித்து, "என்னப்பா ஆச்சு? ஏன் இப்படி பிரமை பிடிச்ச மாதிரி இருக்கிறாய்?" என்று மென்மையாகக் கேட்டார்.

சற்று நேரம் அமைதியாக இருந்தவன் வாயில் இருந்து வார்த்தைகள் வருவதற்குப் பதில், கண்களில் இருந்து கண்ணீர் வெடித்துக் கிளம்பியது. சின்ன விசும்பல்களுக்கு இடையே, "வேலை போயிடுச்சு..." என்றான். மேற்கொண்டு அவனே பேசட்டும் என்பதுபோல் முதுகை தடவிக்கொடுத்தார் ஞானகுரு. தன் சோகக் கதையைக் கொட்டினான்.

ராமநாதபுரம் பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்த ஏழை குடும்பத்தில் பிறந்தவனாம் கணேசன். பதினோராம் வகுப்பு பரிட்சை எழுத இருந்த சமயத்தில் அம்மா நோய் தாக்கி இறந்துபோயிருக்கிறார். குறைந்த சம்பளத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த அவனது தந்தையால், வைத்தியத்துக்கு வாங்கிய கடனை தர முடியவில்லை. எனவே, கடன்காரர்களுக்குப் பயந்து, இரவோடு இரவாக ஊரைவிட்டு ஓடி விட்டாராம். இவனது தங்கையை மட்டும் சித்தி வளர்த்துக் கொள்கிறேன் என்று சொல்லி, இவனை கைகழுவியிருக்கிறார்கள். ஏதாவது வேலை செய்து தங்கையின் செலவுக்கும், அப்பாவின் கடனுக்கும் பணம் அனுப்புகிறேன் என்று மதுரை வந்திருக்கிறான்.

வழியற்றவர்களுக்கு ஆபத்பாந்தவனாக கைகொடுக்கும் ஹோட்டல் வேலையில் முதலில் நுழைந்திருக்கிறான். ஒரு வருடத்திற்கும் மேலாக வேலை பார்த்தும் சரியாக சம்பளம் தராமல் இழுத்தடித்திருக்கிறார்கள். அதனால் அங்கிருந்து வெளியேறி ஒரு மெக்கானிக் கடையில் வேலை பார்த்திருக்கிறான். இரவும் பகலும் கசக்கிப் பிழிந்து வேலை வாங்கிய முரட்டு எஜமானின் அடி



தாங்காமல் அங்கிருந்தும் விலகியிருக் கிறான். இதற்கடுத்து திருப்பரங்குன்றத் தில் இருக்கும் ஒரு லாட்ஜில் வேலைக்குச் சேர்ந்திருக்கிறான். அங்கு நடக்கும் விபசாரத்திற்கு நிர்வாகம் உடந்தையாக இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்திருக்கிறான். வலுக்கட்டாயமாக இழுத்துவரப்பட்ட ஒரு பெண்ணிற்கு ஆதரவாக பேசியதும், இத்தனை நாள் வேலை பார்த்த சம்பளத்தைக்கூட கொடுக்காமல் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டார்களாம். அவனுக்கு என சொந்தமாக இருந்த இரண்டு சட்டையைக் கூட எடுக்க அனுமதிக்கவில்லையாம்.

”நான் ராசியில்லாதவன் சாமி. நான் பிறந்ததுமே நல்லா வசதியா இருந்த தாத்தாவுக்கு தொழில்ல நஷ்டமாயிருச்சு. அதனால எல்லோருமே என்னைய தரித்திரம்னு சொல்வாங்க. நான் எதுக்குமே லாயக்கில்லை, வாழ்க்கையை ஜெயிச்சதில்லை, ஜெயிக்கப் போவதுமில்லை. நான் எங்கே போனாலும், என் தரித்திரம் எனக்கு முன்கூட்டியே போயிடுது...” என்று அழுதான்.

அவன் முழுவதுமாக அழுது முடியும் வரை காத்திருந்த ஞானகுரு பேசத் தொடங்கினார்.

”கணேசா... நீ எதிலேயும் ஜெயித்ததில்லை என்று சொல்லாதே... நீ பிறந்ததே ஒரு மாபெரும் போராட்டத்தின் வெற்றிதான். நீ கருவாக உருவான நேரத்தில் உன்னுடன் போட்டியிட்ட கோடானுகோடி எண்ணிக்கையிலான உயிர் அணுக்களை தோல்வியடையச் செய்துதான் நீ ஜனித்திருக்கிறாய். இந்த உலகில் பிறந்த எல்லோருமே உன் வயது வரை வளர்ந்து, வாழ்ந்துவிடுவது இல்லை. அந்த வகையிலும் நீ ஒரு வெற்றியாளன். நீ இத்தனை வருடங்கள் நல்ல உடல்நலத்தோடு வாழ்ந்து வருவதும் சாதனைதான். இதற்குமேலும் ஏன் உன்னையே நத்தையைப் போன்று சுருக்கிக் கொள்கிறாய்...”

ஞானகுருவை நிமிர்ந்து பார்த்த கணேசன், “நீங்க பேசுறதைக் கேட்க நல்லாத்தான் சாமி இருக்கு, ஆனா வேலையில்லாம படுற கஷ்டத்தை அனுபவிச்சுப் பார்த்தாத்தான் தெரியும்...” என்று லோகாதாயம் பேசினான்.

”நீ மதுரைக்கு எதுவுமே தெரியாமல் வந்தாய். அந்த நிலைக்கே ஒரு வேலை உனக்காக காத்திருந்தது. இப்பொழுது நீ ஹோட்டல் வேலையையும், மெக்கானிக் தொழிலையும் கற்று வைத்திருக்கிறாய் வேலை கிடைக்காமலா போய்விடும்...” என்று ஞானகுரு கூறிய நேரத்தில், ஏற்கெனவே அறிமுகமான மகேந்திரன் சில ஆட்களுடன் வந்து சேர்ந்தார்.

”சாமி... இவங்க எல்லோரும் என்கூட மலைக்குக்கீழே இருக்கிறவங்க, உங்களை தரிசிக்க ஆசைப்படுறாங்க...” என்று மகேந்திரன் சொல்லி முடிக்கும் முன்னரே...

’’சாமி... உங்களுக்கு மாய, மந்திரமெல்லாம் தெரியுமாமே...” என்று வந்தவர்களில் ஒருவன் ஆர்வமுடன் கேட்டான். ஞானகுரு மகேந்திரனைப் பார்க்க, அசட்டுத்தனமாக முகத்தை வைத்தபடி நின்றுகொண்டிருந்தார்.

’’யோகசித்தி வாய்ப்பது மிக அபூர்வம், அதனை விளையாட்டு போன்று கேட்பதும், வேடிக்கை பார்க்க நினைப்பதும் சாபக்கேடான குற்றம்...” என்று குரலில் கொஞ்சம் காரம் கூட்டினார் ஞானகுரு.

நான் ராசியில்லாதவன் சாமி. நான் பிறந்ததுமே நல்லா வசதியா இருந்த தாத்தாவுக்கு தொழில்ல நஷ்டமாயிருச்சு. அதனால எல்லோருமே என்னைய தரித்திரம்னு சொல்வாங்க.

வந்தவர்கள் ஏதோ தவறுதலாகக் கேட்டதாக நினைத்து அமைதியடைய, ஒருவன் மட்டும், “சாமி... வேற மதத்துக்காரங்க வந்து நம்ம மதத்தைப் பத்தி தப்புத்தப்பா பேசுறாங்க. அதைக்கேட்டு கொஞ்சபேர் ஏமாந்துபோய் மதம் மாறிப் போயிடுறாங்க... இதை யெல்லாம் தடுக்க ஏதாவது செய்யணும்...” என்றான் ஒருவன்.

அவனை கூர்ந்து பார்த்து, “வேறு மதத்தில் இருந்து உன் மதத்துக்கு மாறி வந்தவனை என்ன சொல்வாய்..?” என்று கேட்டார்.


உடனே கொஞ்சமும் யோசிக்காமல், “அவனுக்கு புத்தி வந்திடுச்சு, இப்பவாது திருந்தி வந்துட்டானேன்னு சந்தோஷமா ஏத்துக்க வேண்டியதுதான்...” என்றான்.

’’பிறக்கும்போது அனைவரும் பரிசுத்தமான குழந்தைகள்தான். பெறோர்கள்தான் இந்து, முஸ்லீம், கிறிஸ்துவன் என்று வளர்க்கிறார்கள். மாற்று மதங்களில் என்ன இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளாமலே, தன்னுடைய மதம் மட்டுமே உயர்ந்தது என்ற சிந்தனையுடன் வளர்ந்து விடுகிறார்கள். எல்லா மதங்களும் அன்பைத்தான் போதிக்கின்றன. ஆனால், மதத்தின் பேரால்தான் இந்த உலகில் அதிகமான போர் நடந்து அதிகமான மனிதர்கள் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். எல்லோருக்கும் எல்லா மத கோட்பாடுகளும் தெரிய வேண்டும், அதில் பிடித்ததை தேர்வு செய்வதும், விலகி நிற்பதும் அவன் உரிமை” என்றார்.

”அதெல்லாம் சரிப்படாது சாமி...” என்று ஒருவன் உரக்கப் பேச, ”ஏன்... உன் மதத்தின் மீது உனக்கு நம்பிக்கை இல்லையா?” என்று திரும்பிக் கேட்டதும் அடங்கிப் போனான்.

“உன் மதத்தில் அவனுக்கு ஏதோ ஒரு குறை, சிக்கல் இருப்பதால், வேறு ஒரு மதத்துக்குப் போகிறான். பெரும்பாலான இந்துக்கள் மதம் மாறுவதற்கு காரணம், ஜாதி கொடுமைதான். ஒரு மனிதனை கோயிலுக்குள் வரவிடாமல் தடுப்பது கடவுளுக்குப் பிடித்தமான செயலாக இருக்குமா..? அவனுக்கு உன் கடவுள் மீது கோபம் இல்லை, மதத்தின் மீதுதான் கோபம். எல்லா மதத்திற்கும் ஒரே கடவுள்தான். எல்லா மதங்களும் போய் சேரும் இடம் ஒன்றேதான். அதனால் உன் மதம் பற்றிய கவலையை விடு. அதை உன் கடவுள் பார்த்துக்கொள்வார்” என்றதும் ஒருவன் கேள்வியை திசை திருப்பினான்.





“சாமி.. நீங்க சபரிமலைக்குப் போய் ஐயப்பனை தரிசனம் செஞ்சிருக்கீங்களா..?” என்று கேட்டான்.

“பெண்ணை வரக்கூடாது என்று சொல்லும் கடவுள், கோயில், ஆகமம் மீது எனக்கு நம்பிக்கை இல்லை” என்று அழுத்திச் சொன்னார் ஞானகுரு.

இந்த பதிலுக்கு எப்படி ரியாக்ட் செய்வது என்று புரியாமல் தவிக்க ஒருவன், “சாமி... இந்த உலகத்தில நல்லவங்க கஷ்டப்படுறாங்க, கெட்டவங்க வசதியா இருக்காங்க, இது ஏன் சாமி?” என்று ஆர்வமாகக் கேட்டான்.

”நீ நல்லவனா.. கெட்டவனா?” என்று அவனை உற்றுப்பார்த்தார் ஞானகுரு. அந்தக் கேள்வியை எதிர்பார்க்காதவன் கொஞ்சம் யோசித்து, “பெரிய தப்பு எதுவும் செஞ்சது இல்ல சாமி, அதுபோல ரொம்ப நல்லதும் பண்ணியதில்லே...” என்று குழம்பினான்.

”ஒருவனை நல்லவன் அல்லது கெட்டவன் என்று முடிவு செய்வது காலம் மட்டுமே. ஒரு திருடன் கத்தியைக் காட்டி மிரட்டும்பொழுது, யாருமற்ற தெருவில் அனாதையாக பணம் கிடைக்கும்போது, முகம் பார்க்கும் கண்ணாடிகள் நிறைந்த அறையில் தனியாக இருக்கும்போது ஒவ்வொரு மனிதரும் எப்படியெல்லாம் நடந்து கொள்வார்கள் என்பதை அவர்களே முன்கூட்டி அறியமாட்டார்கள். வெளிஉலகத்திற்கு அமைதியாக இருப்பவன் வீட்டில் மனைவி, குழந்தைகளை அடக்கியாளும் கொடூரனாக இருக்கலாம். எல்லோரிடமும் வம்பு வளர்த்துக் கொண்டிருப்பவன், தனிமைக்குப் பயந்து நடுங்குபவனாக இருக்கலாம். உலகில் வாழும் எல்லா மனிதர்களிடமும் மிருக குணம் அடிமனதில் உலவிக் கொண்டுதான் இருக்கும். சாட்சிக்கு யாருமில்லாத சந்தர்ப்பத்தை எந்த மனிதனும் தவறவிடுவதில்லை...”

”அப்படின்னா யாருமே நல்லவங்க இல்லையா சாமி...?”

”தவறு செய்ய சந்தர்ப்பம் கிடைத்தும், அதைச் செய்ய துணிவில்லாதவர்களை நல்லவர்கள் என்று சொல்வது சரியில்லை என்கிறேன் அவ்வளவுதான். அதனால் முன்னேறியவனை கெட்டவன் என்றும், கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவனை நல்லவன் என்ற பார்வையாலும் பார்க்காதே.

உன்னுடைய பார்வையில் மிகவும் நல்லவனாகத் தெரியும் ஒருவன், இன்னொருவன் பார்வையில் கெட்டவனாகத் தெரியலாம். பணக்காரன், வசதியானவன், இறைவனால் ஆசிர்வதிக்கப் பட்டவன் என்று நீ நினைக்கும் ஒருவன், சேமித்திருக்கும் பணம் போதவில்லையே என்று பிச்சைக்காரனாக புலம்பிக் கொண்டிருக்கலாம். அதனால் கஷ்டப்படுவதற்கும் சுகமாக இருப்பதற்கும் நல்லவனாக இருப்பதற்கும் எந்த தொடர்பும் கிடையாது. யாருக்கும் பிடிபடாத உலகநீதியை உரசிப் பார்க்காதே...” என்று எழுவதற்கு முயற்சித்தார் ஞானகுரு.

”சாமி... இன்னும் ஒரே ஒரு கேள்வி...” என்றவன் அனுமதியை எதிர்பாராமல், ’’கொரொனா, சுனாமி... பூகம்பம், புயல், இடிமழைன்னு உலகத்திலே நடக்கிறதைப் பார்த்தா பயமா இருக்கு சாமி, உலகம் சீக்கிரம் அழிஞ்சிடும்னு சொல்றாங்களே உண்மையா?” என்று கேட்டார்.

”இந்த பூமி உருவான காலங்களில் இருந்து அன்றாடம் நடந்துவரும் மிகச்சாதாரண நிகழ்ச்சிகள்தான் இவை. உலகம் உங்கள் கைக்குள் சுருங்கிப் போனதால், இதுபோன்ற நிகழ்வுகளை தொலைக்காட்சிகளில் கண்டு பயப்படுகிறீர்கள். எப்படியென்றாலும் அழிவு என்பது கண்டிப்பாக உண்டு, அது மனிதனுக்குத்தானே தவிர இந்த உலகத்திற்கு இல்லை...” என்றபடி எழுந்தார்.

மகேந்திரனை அருகே அழைத்து, “இவன் கணேசன், சின்ன வயசிலேயே வாழ்க்கை இவனுக்கு அக்னி பரிட்சை நடத்துகிறது. இவனுக்கு சிறிய அளவில் இட்லிக் கடை வைப்பதற்கு உதவி செய், அதற்குப் பின் பிழைக்கும் வழியை அவனே தேடிக்கொள்வான்” என்று உத்தரவு போட்டுவிட்டு நடை போட்டார் ஞானகுரு.



# ஆசையை ஆரம்பத்திலே அழித்துவிடு..!

நாயின் செயலை உற்றுக் கவனித்தால் விசித்திரமாக இருக்கும். எந்தக் காரணமும் இன்றி திடீரென தெருவின் எல்லை வரை ஓடும், கொஞ்சநேரத்தில் போன வழியே திரும்பவரும். சில நிமிடங்கள் அமைதியாக படுத்திருக்கும். பின் மீண்டும் எழுந்து ஏதேனும் ஒரு பக்கம் ஓடுவதும், திரும்புவதும் குலைப்பதுமாக இருக்கும். இதைத்தான், நாய்க்கு வேலையில்லை, நிற்க நேரமில்லை என்பார்கள். எந்தக் காரணமும் இன்றி நாய் மட்டும் ஓடவில்லை, மனிதனும்தான். ஏன், எதற்காக என்று யோசிக்காமல் செய்யும் காரியங்களால்தான் பெரும்பாலான மனிதர்கள் மாட்டிக்கொண்டு அவஸ்தைப்படுகிறார்கள்.

பொதுவாக மனிதனின் மூளையில் நிமிடத்திற்கு ஆயிரக்கணக்கான சிந்தனைகள் தோன்றுவது வழக்கம். அதுவும் வேலை இல்லாமல் சும்மா இருப்பவனைப்பற்றி கேட்கவே வேண்டாம். எதையாவது யோசித்துக்கொண்டே இருப்பான். அப்படி மூளையில் தோன்றும் சிந்தனைகளை எல்லாம் புறங்கையால் தள்ளிவிடுவதுதான் புத்திசாலி மனிதனின் செயல். தூக்கத்தில் வரும் கனவு பற்றி அதிகம் சிந்திக்காமல் காலையில் தூக்கிப்போடுவது போலவே, தேவையற்ற சிந்தனைகளையும் தூக்கிப்போடத் தெரிய வேண்டும். அதுவும் ஆரம்பகட்டத்திலேயே நிறுத்தவேண்டும் என்பதுதான் மிகவும் முக்கியம். பொதுவாக தங்கள் சொந்த

www.gyanaguru.com

வாழ்வுக்குத் தேவையற்ற விஷயம் குறித்து ஆலோசிப்பதும், சிந்திப்பதும் சிக்கலையே தரக்கூடியது. தேவையற்ற விஷயங்களை ஆரம்பகட்டத்தில் ஒதுக்கவும் தள்ளவும் தெரியாதவர்களே, வாழ்வில் தேவையற்ற சுமைகளை சுமந்து கஷ்டப்படுகிறார்கள்.

தேவராஜ் கிராமத்தில் ஒரு பெட்டிக்கடை வைத்து பிழைத்துக்கொண்டு இருந்தான். தினமும் ஒரு முறை நகரத்திற்குச் சென்று கடைக்குத் தேவையான பொருட்களை வாங்கிவருவான். கிராமம் என்பதால் கடையில் அப்படியொன்றும் கூட்டம் இருக்காது. ஆட்கள் வருவதைப் பொறுத்து தேவராஜோ, அவனது மனைவி சரோஜாவோ சாமான் எடுத்துக்கொடுப்பார்கள். குறைவான லாபம் என்றாலும் மனைவி, பிள்ளைகளுடன் நிம்மதியாக வாழ்ந்துவந்தான்.

பக்கத்து கிராமத்தில் இருந்து தேவராஜின் தூரத்து உறவினர் ராகவன் ஒரு மாடு மற்றும் கன்றுக்குட்டியுடன் வந்தான். மனைவிக்கு மருத்துவம் பார்ப்பதற்காக நகரத்தில் சில வாரம் தங்கவேண்டியுள்ளது. அதுவரை இந்த மாட்டை உன்னால் பார்த்துக்கொள்ள முடியுமா? என்று கேட்டான். தினமும் பத்து லிட்டர் வரை பால் கொடுக்கும் என்பதால், இதை வைத்திருந்தால் உனக்கு லாபமாக இருக்கும் என்று சொன்னான். மாடு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று தேவராஜ் சொன்னான். ஆனால் அவன் மனைவி சரோஜாவுக்கு மாடு, கன்றை பார்த்ததும் ஆசை வந்தது. வீட்டுக்கு லட்சுமி வந்துவிட்டதாக நினைத்தாள்.

ஏன் முடியாதுன்னு சொல்றீங்க. வீட்டுக்குப்பின்னாலே புல்லுக விளைஞ்சு கிடக்கு. தேவைன்னா மட்டும் புண்ணாக்கு வாங்கிப்போடலாம். கோனார் பால் கறந்து கொடுப்பார். அதை வித்தா செலவுக்கு சரியாப்போகும். அண்ணனுக்கு உதவி செஞ்சதா இருக்கும், நமக்கும் பொழுது போகும். மாடு இங்கேயே இருக்கட்டும் என்று அழுத்தமாக சொன்னாள்.

விவரம் தெரியாம வளர்க்கமுடியாது என்று தேவராஜ் சொல்வதற்கு முன்னரே, வீட்டுக்குப் பின்புறம் மாட்டை கட்டிவிட்டான் ராகவன். இந்த மாடு வந்தபிறகுதான் எனக்கு நிறைய பணம் சேர்ந்திச்சு. உங்களுக்கு சேரும் பாருங்க என்று சொன்னான். மனதோரம் தேவராஜுக்கும் கொஞ்சம் ஆசை வரவே, சம்மதம் தெரிவித்தான்.

முதல் நாள் சரோஜாவும் பிள்ளைகளும் மாட்டை மிகவும் நன்றாக கவனித்துக்கொண்டார்கள். பாலை அக்கம்பக்கம் இலவசமாக கொடுத்தார்கள். சாணம், கோமியம் வாடையை சகித்துக்கொள்ள முடியாமல் பிள்ளைகள் அடுத்தநாள் பக்கத்தில் வரவில்லை. தினம் ஒரு பெரிய புல்லுக்கட்டை தின்றுவிட்டு, அடுத்ததை கேட்டது மாடு. கன்றுக்குட்டியின் அட்டகாசம் அதைவிட பெரியதாக இருந்தது. பிள்ளைகள் பள்ளிக்கூடம் போய்விட்டார்கள். தேவராஜ் பட்டணம் போய்விட்டான். கடைகளில் ஆட்கள் நிற்கும்போது மாடு கத்தி கூப்பாடு போட்டது. மாட்டை கவனித்தால் கடைகளில் ஆட்கள் நின்றார்கள். இரண்டையும் கவனித்துக்கொண்டு சமையல் செய்ய முடியாமல் போனது.

அடுத்த நாள் பால் கறப்பதற்கு கோனார் வரவில்லை. பால் விற்பனை செய்வதிலும் பிரச்னை வந்தது. மாடு வந்ததில் இருந்து தினம் ஒரு பிரச்னை வரவே கடையை கவனிக்க முடியாமல் தேவராஜும், வீட்டை கவனிக்க முடியாமல் சரோஜாவும் திணறினார்கள். இரண்டு வாரங்கள் ஆகியும் ராகவன் வரவில்லை. போன் செய்து பார்த்தும் பதில் இல்லை. மாட்டை வைத்து தேவராஜ் குடும்பத்தில் சண்டை வரத்தொடங்கியது. இனி நான் மாட்டை கவனிக்க மாட்டேன் என்று வீம்பு செய்தாள் சரோஜா. அவளை சமாளிக்க சிரமப்பட்ட நேரத்தில் மாடு திடீரென சுணங்கியது. அதற்கு என்ன செய்கிறது என்று கண்டுபிடிப்பதற்குள் வாயில் இருந்து நீர் கொட்டத் தொடங்கியது. ஊரார் சொன்ன மாதிரி ஏதேதோ இலைகளை எல்லாம் அரைத்துக்கொடுத்தான். எதுவும் சரியாகவில்லை.

நகரத்திற்கு சென்று மாட்டு டாக்டரை தேடிக் கண்டுபிடித்து கூட்டி வருவதற்குள் மாடு செத்துப்போனது. கன்றுக்குட்டியை மட்டும் வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் இருந்த நேரம் ராகவன் வந்தான். மாடு செத்துப்போன தகவல் தெரிந்ததும் ஆகாயத்துக்கும் பூமிக்குமாக குதித்தான். அதற்கான தொகையை கொடுத்தே தீரவேண்டும் என்று சொன்னான். வேறு வழியில்லாமல் தன்னுடைய காதில் இருந்த தோட்டையும் மூக்குத்தியையும் கழட்டிக்கொடுத்தாள் சரோஜா. மாடும் கன்றும் போனபிறகு தங்கள் வீட்டுக்குத் தனி அழகும் சந்தோஷமும் திரும்பியதை தம்பதியர் உணர்ந்தார்கள்.

தேவராஜ் போன்று ஆழம் தெரியாமல் காலை விடும் மனிதர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஒரு நிறுவனத்தில் நாலைந்து மாதங்கள் வேலை பார்த்தவுடனே, தொழில் கற்றுக்கொண்டேன் என்று தொழில் தொடங்கி நஷ்டப்படுகிறார்கள். ஆசைக்கும் நிம்மதிக்கும் தொடர்பு இல்லை என்பதை தெரிந்துகொண்டவன் மட்டுமே சந்தோஷமாக வாழமுடியும்.

**அப்படியென்றால் எந்த சிந்தனையையும் செயல்படுத்தக்கூடாதா?**

உனக்கு கார் தேவைப்படுகிறது என்று யோசித்தால்... வாங்கலாம். ஆனால் பக்கத்துவீட்டுக்காரன் கார் வாங்கிவிட்டான் என்பதற்காக, தானும் கார் வாங்க ஆசைப்படுவது நிச்சயம் துன்பத்தையே தரும். அவனுக்கு கார் தேவையாக இருக்கிறது, எனக்கு இப்போது தேவை இல்லை என்று உன் சிந்தனையை உடனடியாக தடை செய்துவிட்டால் நிச்சயம் நிம்மதி கிடைக்கும். இதுபோன்று உன் மனதில் தோன்றும் ஒவ்வொரு எண்ணங்களையும் செயல்படுத்த நினைக்கும் முன்பு, மீண்டும் மீண்டும் யோசித்துப்பார். தேவையற்ற சிந்தனை என்றால் ஆரம்பத்திலேயே தூக்கியெறி.

**அது எப்படி ஆரம்பத்திலேயே கிள்ளிப்போடுவது?**

உன்னுடைய வாழ்க்கை எப்படி அமைந்திருக்கிறது, எப்படி போகவேண்டும் என்பதில் தீர்மானமாக இரு. உன்னை திசை திருப்புவதற்காக தொலைக்காட்சிகளும் நாளிதழ்களும் கூவிக்கூவி அழைக்கலாம். 20 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்ட செல்போன், ஆடி மாத தள்ளுபடியாக 15 ஆயிரத்துக்கு கிடைக்கிறது என்று ஆசை காட்டுவார்கள். உன்னிடம் இருக்கும் செல்போன் நன்றாக வேலை செய்யும்வரையிலும் எந்த ஆசை வலையிலும் சிக்குவதில்லை என்பதில் உறுதியாக இரு. அதை வாங்கு, இதை வாங்கு என்று போடும் கூப்பாடுகளை காதில் போட்டுக்கொள்ளாமல் நடை போட பழகு.

**மந்திரச்சொல்**

அடுத்தவரை போல வாழ
ஆசைப்பட்டால், உன்னுடைய
வாழ்க்கை காணாமல் போய்விடும்.

**ஆனால், புதிது புதிதாக சிந்தனைகள் வந்துகொண்டே இருக்கிறதே..?**

நிச்சயமாக மரணத்தில் கடைசி நொடி வரையிலும் ஆசையினால் விளையும் சிந்தனைகள் வந்துகொண்டே தான் இருக்கும். வெட்டவெட்ட முளைக்கும் களைகள் போல உன் மனதில் தேவையற்ற சிந்தனைகள் வந்துகொண்டுதான் இருக்கும். முளைப்பது களைகளின் தன்மை என்றால், அவற்றை உடனடியாக கிள்ளிப் போடுவது உன்னுடைய தன்மையாக இருத்தல் வேண்டும். ஆரம்பத்திலேயே கிள்ளவில்லை என்றால் வேர்விட்டு, மரமாகி உன்னையே அழித்துவிடும்.

**மனைவி அல்லது மேலதிகாரி நம் மீது அவர்களது சிந்தனைகளை திணித்தால்..?**

பதவி உயர்வு என்ற ஆயுதத்தை மேலதிகாரி எடுக்கலாம். எதிர்காலம் நிம்மதியாக இருக்கும் என்று உன் மனைவி தூண்டலாம். ஆனால், உன்னுடைய வாழ்க்கை உன் விருப்பம் என்பதால் எவர் சொன்னாலும் ஏற்காதே. பிறர் சொன்னதற்காக வாழ நினைத்தால் கழுதை போல் கவலைகளை சுமந்துகொண்டே திரி.

**சிந்திப்பதை நிறுத்துவதற்கு வழியே இல்லையா?**

மூச்சு நிற்கும்போதுதான் சிந்தனை நிற்கும். ●



“இந்த மாடு வந்தபிறகுதான் எனக்கு நிறைய பணம் சேர்ந்திச்சு. உங்களுக்கு சேரும் பாருங்க என்று சொன்னான். மனதோரம் தேவராஜுக்கும் கொஞ்சம் ஆசை வரவே, சம்மதம் தெரிவித்தான்.”

# நீ என்பது உனது உடம்பு தான்..!

ஆத்மா என்ற வார்த்தை பலருக்கும் பிடித்தமானது. ஏனென்றால், அது அழிவற்றது என்ற நினைப்பே எல்லோருக்கும் இனிமையானது. தனக்கு அழிவே கிடையாது என்ற கற்பனையால் மனிதர்கள் ஈர்க்கப்படுகிறார்கள். மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்கவும், வாழ்வதற்குமே மனிதர்கள் விரும்புகிறார்கள்.

ஆனால், ஆத்மா என்பதற்கு ஏதேனும் உறுதியான ஆதாரம் இருக்கிறதா என்றால், இதுவரை இல்லை. எனவே உண்மை என்னவென்றால், நீ என்பது உனது உடம்புதான்.

ஆத்மா பற்றி பல்வேறு கருத்துக்கள் இருக்கலாம். ஆனால் அவை வெறும் கருத்துக்களே.. வெறும் நினைப்புகளே. நீ இருக்கும் நிலையில், இந்தக் கணத்தில், நீ என்பது வெறும் உடல் மட்டுமே. உன்னையே நீ ஒரு இறப்பற்ற ஆத்மா என்றும், அழிவற்ற உயிர் என்றும், ஏமாற்றிக்கொண்டிருக்காதே.

ஏன் ஆத்மாவை மனிதர்கள் நம்புகிறார்கள் என்ற காரணம் தெரியுமா..? அந்த நம்பிக்கை என்பது பயத்தின் அடிப்படையிலானது. ஏனென்றால் இள வயதில் பெரும்பாலோர் ஆத்மா பற்றி கண்டுகொள்வதே இல்லை. நீ பலவீனமடையும் பொழுது, உனக்கு வயதாகிவிடும்போது, நீ கடவுளையும் அழிவில்லாத ஆத்மாவையும் நம்பஆரம்பிக்கிறாய். அதன்பிறகு நீ கோவிலுக்கோ அல்லது சர்ச்சுக்கோ அல்லது மசூதிக்கோ போவாய். அதனால்தான் அங்கு வயதான, இறக்கும் தருவாயில் உள்ளவர்களே அதிகம் குவிந்திருக்கிறார்கள்.

இளமை, அடிப்படையில் நாத்திகத் தன்மை கொண்டது, அது எப்பொழுதுமே அப்படித்தான் இருந்து வந்திருக்கிறது. நீ எவ்வளவு இளமையானவனோ, அந்த அளவு ஆத்திகம் குறைவாகவே இருக்கும். நீ எவ்வளவு இளமையானவனோ அந்த அளவு நம்பிக்கையின்மை அதிகமாக இருக்கும். ஏனெனில் நீ இளமையில் பலமுள்ளவனாக இருக்கிறாய். பயத்தை குறைவாக உணர்கிறாய். மேலும் நீ இறப்பை அறியாதவனாக இருக்கிறாய்.

இறப்பு எங்கோ வெகு தூரத்தில் இருக்கிறது. அது மற்றவர்களுக்கு மட்டுமே நிகழ்கிறது. உனக்கு இல்லை என்று நம்புகிறாய். ஆனால் வயதாக ஆக, அது உனக்கும் நிகழப் போகிறது என்று கொஞ்சம் கொஞ்சமாக உணர ஆரம்பிக்கிறாய்.

இறப்பு அருகே வரும்பொழுது, ஒருவன் நம்ப ஆரம்பிக்கிறான். எனவே எல்லா நம்பிக்கைகளும் பயத்தை அடிப்படையாகக் கொண்டவையே. ஆனால் இப்படி பயத்தின் காரணமாக நம்புபவன் தன்னையே ஏமாற்றிக் கொள்கிறான்.


நீ இப்போது உடலாகவே இருப்பதால் இதுவே உண்மை நிலையாக கருதுகிறாய். உனக்கு இறப்பற்றதைப் பற்றி எதுவும் தெரியாது. உனக்கு இறந்து கொண்டிருப்பதைப் பற்றித் தான் தெரியும். ஆனால் இறப்பற்றது அங்கே இருக்கிறது. அதை நீ




gyanaguru.com

# நீ என்பது உனது உடம்பு தான்..!

நீ ஒரு உடலாகப் பிறக்கிறாய்; நீ ஒரு உடலாக வாழ்கிறாய்; நீ ஒரு உடலாக நோய்வாய்ப் படுகிறாய்; உனக்கு வைத்தியம் செய்து, மருந்து கொடுத்து, உதவி செய்து, மீண்டும் முழு ஆரோக்கியமுள்ள ஒரு உடலாக ஆகிறாய்.



தெரிந்து கொள்ள முடியும். ஆனால் வெறுமனே நம்புவதில் பயனில்லை.

எனவே உடலை மட்டும்தான் நம்ப வேண்டும். நீ உடம்பிலிருந்துதான் ஆரம்பிக்க வேண்டும். ஏனெனில் நீ உடம்பினுள்தான் இருக்கிறாய். இதுவும் கூட சரியில்லை. நீ உடம்பினுள் இருக்கிறாய் என்று நான் சொல்வது கூட சரியல்ல. உன்னைப் பொறுத்தவரை நீ உடம்பினுள் இல்லை. உடம்பாக இருக்கிறாய். உனக்கு உடம்பினுள் என்ன இருக்கிறதென்பது பற்றி எதுவும் தெரியாது. உனக்கு உடல் மட்டுமே தெரியும். எனவே உடம்பைத் தாண்டிய அனுபவம் என்பது இன்னும் வெகு தொலைவில் உள்ளது.

நீ மதவாதிகளிடம், தத்துவவாதிகளிடம் சென்றால், அவர்கள் ஆத்மாவிலிருந்து ஆரம்பிப்பார்கள். கிறித்துவ தத்துவவாதிகள், இன்னும் மற்ற மதத்தைச் சேர்ந்த எல்லோருமே உடம்பிற்கு எதிராக, அதை கண்டிப்பவர் களாகவே உள்ளனர். அவர்கள் ஒரு இருமையை, ஒரு பிளவை உருவாக்குகிறார்கள், நீ இரண்டானவன் என்பது போல. அவர்களுக்கு இந்த உடல் தீயது, எதிரி. எனவே அதோடு சண்டையிட வேண்டும். இந்த இருமை அடிப்படையிலேயே தவறானது. மேலும் இந்த இருமை உனது மனதை இரண்டாகப் பிரித்து, ஒரு பிளவுபட்ட மனிதனை உருவாக்குகிறது.

நீ ஒரு உடலாகப் பிறக்கிறாய்; நீ ஒரு உடலாக வாழ்கிறாய்; நீ ஒரு உடலாக நோய்வாய்ப்படுகிறாய்; உனக்கு வைத்தியம் செய்து, மருந்து கொடுத்து, உதவி செய்து, மீண்டும் முழு ஆரோக்கியமுள்ள ஒரு உடலாக ஆகிறாய். நீ இளமையான உடலாகிறாய்; நீ வயதான உடலாவாய்; நீ ஒரு உடலாக இறந்து போவாய். உனது முழு வாழ்வும் உடலை மையமாகக் கொண்டது.

வாழ்க்கை முழுதும் நீ என்ன செய்கிறாய்? உன்னைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறாய். உணவு, தண்ணீர், உறைவிடம் ஆகியவற்றால் நீ எதைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறாய்? இந்த உடலே காப்பாற்றப்படுகிறது. அழிவற்ற உன்னுடைய இருப்பை காப்பாற்றிக் கொள்ள நீ எந்த முயற்சியும் செய்யவே இல்லை.

நீ கடந்து செல்ல முடியும். ஆனால் அந்தப் பயணம் உடலின் மூலமாக, உடலால் செய்யப்பட வேண்டியதாகும். நீ உடலைப் பயன்படுத்தியே அடைய முடியும்.

எனவே காமத்திற்கு எதிராக உள்ள மரபுகள் எல்லாம் உடலுக்கும் எதிராகவே இருக்கும். காமத்திற்கு எதிராக

## மந்திரச்சொல்

உன் கோபத்துக்காக நீ தண்டிக்கப் படுவதில்லை. உன் கோபத்தாலே நீ தண்டிக்கப்படுகிறாய்.



இல்லாத மரபுகள் மட்டுமே உடலுக்கு நண்பனாக இருக்க முடியும். தந்த்ரா முற்றிலும் நட்போடு இருப்பது; உடல் புனிதமானது; புண்ணியம் வாய்ந்தது என்று தந்த்ரா சொல்கிறது. தந்த்ராவைப் பொறுத்தவரை உடம்பைக் கண்டனம் செய்வது என்பது புனிதமானதைப் பழிப்பதாகும். உடம்பு தூய்மையற்றது என்று சொல்வதும், உடம்பைப் பாவச்சுமை என்று சொல்வதும் தந்த்ரா வைப் பொறுத்தவரை அறிவு கெட்ட செயலாகும்.

தந்த்ரா உடலை ஏற்றுக் கொள்கிறது. வெறும் ஏற்றுக் கொள்வது மட்டுமல்ல. மேலும் உடலைப் புனிதமானது; தூய்மையானது; களங்கமில்லாதது என்று சொல்கிறது. நீ அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். நீ அதை ஒரு வாகனமாக, ஒரு வழியாகப் பயன்படுத்தி கடந்து செல்லலாம்! அது கடந்து செல்வதற்கும்கூட உதவி செய்கிறது.

ஆனால் நீ உடலோடு சண்டையிட ஆரம்பித்தால், தோற்றுப் போய் விடுகிறாய். நீ அதனோடு போராட ஆரம்பித்தால், நீ மேலும் மேலும் அதிகமாக நோய்வாய்ப்பட்டுப் போவாய். நீ தொடர்ந்து அதனுடன் போராடிக் கொண்டிருந்தால், வாய்ப்பைத் தவற விடுவாய். போராட்டம் எதிர்மறையானது. எனவே, உடலோடு சண்டையிடாதே. அதற்கு எந்த அவசியமும் இல்லை.

நீ ஒரு காருக்குள் உட்கார்ந்து கொண்டு, அந்தக் காரோடு போராடுவது போன்றது இது. இப்போது நீ நகர முடியாது. ஏனெனில் நீ நகர உதவும் வாகனத்துட னேயே சண்டையிட்டுக் கொண்டிருக்கிறாய். அதைப் பயன்படுத்த வேண்டுமே தவிர அதனோடு போராடக் கூடாது. மேலும் நீ உன் போராட்டத்தினால் அந்தக் காரை அழித்து விடுவாய். பிறகு நகர்வது மேலும் அதிக கடினமானதாகி விடும்.

உடல் ஒரு அழகான வாகனம். மிகவும் புதிர் நிறைந்தது. மிகவும் சிக்கலானது. அதைப் பயன்படுத்து. அதனோடு சண்டையிடாதே.

அதற்கு உதவி செய். நீ அதற்கு எதிராகச் செல்லும் கணத்திலேயே, நீ உனக்கு எதிராகச் செயல்பட ஆரம்பிக்கிறாய். எங்கோ செல்ல விரும்பும் ஒரு மனிதன், தன் கால்களுடனேயே சண்டையிட்டு அவற்றை வெட்டி விடுவது போன்றதே இது. உடலைத் தெரிந்து கொள். அதன் ரகசியங்களை அறிந்து கொள் என்று தந்த்ரா சொல்கிறது. அதன் சக்திகளைப் பற்றி அறிந்துகொள். அந்த சக்திகளை எப்படி நிலைமாற்றம் அடையச் செய்வதென்பதைத் தெரிந்துகொள். எப்படி அவற்றை நகர்த்தி, வேறுபட்ட பரிமாணங்களைக் கொண்டவைகளாக்குவது என்று தெரிந்துகொள்.

எனவே உங்கள் உடல் ஒரு வாகனம், அதை கண்டனம் செய்யாதீர்கள்.

**- ஓஷோ.**



# சைவம் என்பதும் உயிர் கொலை..?

சைவ உணவு சாப்பிடுவது நாகரிகமாகவும், அசைவம் சாப்பிடுவது கொடுமையான செயலாகவும் இப்போது சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது. மிருகங்களை பாதுகாப்பதற்காக பீட்டா போன்ற அமைப்புகள் களத்தில் இறங்கி தீவிரமாகப் பணியாற்றுகின்றன. மாடு, நாய், கிளி போன்றவைகளை பாதுகாக்க போராடுகிறார்கள். சினிமா நட்சத்திரங்களும், விளையாட்டு வீரர்களும் அசைவத்துக்கு எதிராக குரல் கொடுத்து வருகிறார்கள்.

உயிர்களை கொல்லாமல் வாழமுடியும் எனும்போது, எதற்காக இன்னொரு உயிரை கொல்ல வேண்டும் என்பதுதான் சைவ உணவாளர்கள் எழுப்பும் கேள்வி. இந்த கேள்விக்கு விடையாக வந்திருக்கிறது, லியரி கீத் எழுதிய 'வெஜிட்டேரியன் மித்' எனப்படும் சைவ உணவு கற்பனைகள் எனும் நூல்.

நூலாசிரியர் லியரி 20 ஆண்டுகள் பால் கூட குடிக்காத வீகனாக இருந்தவர். அடிப்படையில் ரேடிகல் பெண்ணியம் மற்றும் சூற்றுசூழலில் ஆர்வம் கொண்ட பெண். புவிவெப்பமயத்தை நம்புகிறவர். மிருகங்களின் வாழ்வுரிமையில் நம்பிக்கை கொன்டவர்.

இத்தகைய பெண், இன்று மூன்று வேளையும் இயற்கை யான அசைவ உணவு உண்ண துவங்கி யுள்ளார். அதற்கு அவர் சொல்லும் காரணம் அசைவ உணவில்தான் மிருகவதை மிக குறைவு என்பது. லியரியின் மனமாற்றம் அவர் தோட்டம் ஒன்று பயிரிட ஆரம்பித்ததில் இருந்து துவங்குகிறது. உரம் வாங்கப் போனவர், இரு வகை உரங்கள் உண்டு என்பதை அறிந்தார். நைட்ரஜனால் ஆனது உரம். அதன் ஒரு மூலம் இறந்த மிருகங்களின் ரத்தம், எலும்பிலிருந்து செய்யப்பட்ட இயற்கை உரம். அடுத்தது பெட்ரோலில் தயாரிக்கப்பட்ட செயற்கை நைட்ரஜன், பொடாஷியம், பாஸ்பரஸ் உரம். பெட்ரோல் என்பதும் இறந்த டைனசார்களின் மீதம்தான். புவிவெப்பமயமா, வீகனிசமா என குழம்பி கடைசியில் இயற்கை உரத்தை தேந்தெடுத்தார் லேரி. அதில் இருந்தது முழுக்க ஃபாக்டரிகளில் கொல்லப்பட்ட கோழிகளின் ரத்தம், எலும்பு ஆகியவற்றின் மீதங்கள்.

'நிலம் ரத்தம் கேட்கிறது' என எழுதுகிறார் லேரி. 'மிருகங்களுக்கும், மரங்களுக்குமான உறவு அப்படிப்பட்டது. மண்ணில் இருந்து வந்த எலும்பும், சதையும் மீண்டும் மண்ணுக்கே சென்று உரமாகின்றன. அந்த உரம் இல்லையெனில் செடிகள் வளர்வது இல்லை. 'ஃபாக்டரிகளில் கோழிவளர்ப்பை ஒருபுறம் திட்டிக்கொண்டு மறுபுறம் அவற்றின் மீதத்தை உரமாக்கி வயலில் இடுவது, என் மனசாட்சியில் முதல் ஆணியை அடித்தது' என்கிறார்.

தோட்டம் வளர, வளர லேரியின் மனசாட்சியில் மேலும் ஆணிகள் பாய்ந்தன. செடிகள் வளரத் துவங்கியதும் அதில் ஸ்லக் எனப்படும் பூச்சிகள் சூழ்ந்தன. லெட்டூஸ் இலைகளை அரித்து உண்டன. அவற்றை மருந்து அடித்து கொல்ல லியரிக்கு விருப்பம் இல்லை.

'செடிகள் அவற்றின் இயற்கை உணவு. என் தோட்டத்தை அவை ஆக்கிரமிக்கவில்லை. அவை வசித்த இடத்தில்தான் நான் வீடு கட்டி தோட்டம் போட்டு இருக்கிறேன். அவற்றை நான் எப்படி கொல்வேன்?' என யோசித்த லியரி விஷமருந்து அடிக்க மனம் இன்றி டயடோமாக்ஸ் எனும் இயற்கை பூச்சிகொல்லியை வாங்கி இட்டார். பூச்சிகள் சுத்தமாக அழிந்தன. அதன் பின் தான் லியரிக்கு அந்த உண்மை தெரிந்தது. டயடோமாக்கஸ் ஸ்லக் பூச்சிகளின் உடலை லட்சக்கணக்கான துன்டுகளாக வெட்டி கொல்கின்றன என்று.

வேறு வழியின்றி இறுதியில் மணிக்கணக்கில் உட்கார்ந்து ஒவ்வொரு ஸ்லக் பூச்சியாக பிடித்து வைத்து, அவற்றை வீட்டுக்கு பல மைல் தொலைவு சென்று காட்டில் விட்டார் லேரி. நூற்றுக்கு 99% சைவர்கள் பூச்சிகள் மேல் அத்தனை அன்பு காட்டுவதில்லை. ஆனால் லியரி அத்தனை அப்பாவியாக, மனிதாபிமானியாக இருந்திருக்கிறார்.

ஸ்லக் பூச்சிகளை பிடித்து காட்டில் விட்டதால் அங்கே அவை உயிர் பிழைக்கும் என பொருள் இல்லை. தோட்டத்தில் அடுத்த நாள் மீன்டும் பூச்சிகள் சூழ்ந்தன. வேறு வழியின்றி 25 கோழிக் குஞ்சுகளை வாங்கி வந்தார் லியரி. பூச்சிகளை அவை பிடித்து உண்ணும் என்பதற்கு. 'பூச்சிகளை கொல்ல எனக்கு மனமின்றி கொலையை கோழிகளுக்கு அவுட்சோர்ஸ் செய்தேன்' என எழுதுகிறார் லியரி.

இது ஒவ்வொன்றுக்கும் லியரி சொல்லிகொண்ட சமாதானம் அவருக்கு மன திருப்தி அளிக்கவில்லை. பெரும்பாலான சைவர்கள் ஒரு பூச்சியின் உயிரை ஒரு பசுமாட்டின் உயிருக்கு சமமாக கருதுவதில்லை என்கிறார். பூச்சிமருந்து அடித்து விவசாயம் செய்ய வேண்டியிருப்பது அவர்களுக்கு ஒரு பொருட்டு இல்லை. இதற்கு ஒரு காரணம் பூச்சி வாயை திறந்து கத்துவது இல்லை (அல்லது அது வலியில் கத்துவது நமக்கு கேட்பது இல்லை). சைவர்களின் ஜீவகாருண்யம் பெரிய, அழகான, பரிச்சய மான

www.gyanaguru.com
www.gyanaguru.com

விவசாயத்தை லியரி பயோசைடு என்கிறார். உலகின் மிகப்பெரும் இன அழிப்பு விவசாயம். ஒரு ஏக்கரில் விவசாயம் செய்வது என்பது அங்கே இருக்கும் அனைத்து உயிர்களையும் பூண்டோடு அழித்த பின்னர்தான் செய்ய முடியும். மரங்கள், செடிகள், கொடிகள், எலிகள், முயல்கள், பாம்புகள், மான்கள், பூச்சிகள், புழுக்கள் என அந்த நிலத்தில் வளரும் ஒவ்வொரு உயிரும் அழிக்கப்படுகின்றன.



மிருகங்களுடன் நின்றுவிடுகிறது. ஆனால் லியரி அப்படி இருக்க விரும்பவில்லை.

விவசாயத்தை லியரி பயோசைடு என்கிறார். உலகின் மிகப்பெரும் இன அழிப்பு விவசாயம். ஒரு ஏக்கரில் விவசாயம் செய்வது என்பது அங்கே இருக்கும் அனைத்து உயிர்களையும் பூண்டோடு அழித்த பின்னர்தான் செய்ய முடியும். மரங்கள், செடிகள், கொடிகள், எலிகள், முயல்கள், பாம்புகள், மான்கள், பூச்சிகள், புழுக்கள் என அந்த நிலத்தில் வளரும் ஒவ்வொரு உயிரும் அழிக்கப்படுகின்றன. அதன்பின் அங்கே பயிர்கள் நடப்படுகின்றன. பயிர்களை உண்ண வரும் பூச்சிகள், பறவைகள் அழிக்கப்படுகின்றன. யானைகள் முதலிய மிருகங்கள் சுட்டுக் கொல்லப்படுகின்றன.

வயலை டிராக்டரில் உழுகையில் நிலத்தடியில் இருக்கும் ஏராளமான மிருகங்கள் கொல்லப்படுகின்றன. ஒரு ஏக்கர் நிலத்தை உழுகையில், அறுவடை செய்கையில் பலநூறு பாம்புகள், முயல்கள், மீர்கிட்டுகள், எலிகள் என பல மிருகங்கள் டிராக்டரில் சிக்கி கூழாகி கர்ணகொடூரமாக கொல்லப்படுகின்றன. வட அமெரிக்கா முழுக்க லட்சக்கணக்கில் இருந்த பைசன் எருமைகளின் மேய்விடங்கள் அனைத்தும் விவசாய நிலங்களாக மாறியபின்னர், அவை மேய இடமின்றி அழிந்ததை லியரி கீத் சுட்டி காட்டுகிறார்.

அதுபோக விவசாயத்துக்கு ஆறுகளை பெருமளவில் மறித்து அணைகளை கட்டி மீன்களை ஏராளமாக கொல்கிறோம். உதாரணம் வாஷிங்டன் கவுலி அணைக்கட்டு மட்டும் ஒரு நாளைக்கு 1 லட்சம் ட்ரவுட் மீன்களை கொல்கிறது. ஆற்றுநீரை குடிநீருக்கு நம்பியிருக்கும் பல லட்சம் மிருகங்கள் அணைக்கட்டுகளால் கொல்லப்படுகின்றன.

மிருகங்களை இன அழிப்பு செய்ததில் முக்கிய பங்கு விவசாயத்துக்குத்தான் என்கிறார் லியரி. ஆதி மனிதன் வேட்டையாடி உண்ட வரை பூமியில் காடுகள் செழித்து வளர்ந்தன. வேட்டைக்கு காடு அவசியம். புல்தரை அவசியம். வேட்டையால் பெருமளவில் மிருகங்கள் அழியவில்லை. அதே வட அமெரிக்க ப்ரைரி நிலங்கள் விவசாய நிலங்களாக மாறியபின் பல கோடி ஏக்கர் நிலங்கள் முழுக்க இருந்த உயிர்கள் அனைத்தும் அழிக்கபட்டன. ஒவ்வொருதடவை அறுவடை, நடுதல் செய்யும்போதும் அழிகின்றன.

வயலில் இருக்கும் ஒரு ஆயிரக்கணக்கான சிறுமுயல்கள், எலிகள், மீர்கிட்டுகள், பாம்புகள் இவை அனைத்தும் உயிர்தானே? ஒரு மாடு அல்லது பன்றியின் உயிர் இதை விட எந்த விதத்தில் மதிப்புமிக்கது? சைவ உணவால் உயிர்ப்பலி நிகழ்வதில்லை என நம்புபது லியரி குறிப்பிடும் வெஜிட்டேரியன் மித்களில் ஒன்று.

மூன்று ஏக்கரில் விவசாயம் செய்தால் 20 வீகன்களுக்கு ஒரு வருடம் உணவிட முடியும். ஆனால் அதில் பல்லாயிரம் மிருகங்கள் உயிர் இழக்கும். அந்த மூன்று ஏக்ராவில் ஒரே ஒரு உயிர் கூட எஞ்சி இருக்காது. அதை விட அந்த நிலத்தில் புற்களை வளரவிட்டு மாடு கள் அல்லது பன்றிகளை மேயவிட்டு அவற்றை உண்டால் அதுவே சிறந்த ஜீவகாருண்ய முறை என்பது லியரியின் வாதம். ஏன் எனில் பல்லாயிரம் மிருகங்கள் அதனால் உயிர் பிழைக்கும். அதாவது மாட்டின் உயிரும், முயலின் உயிரும் சமம் என நாம் கருதினால்.


நன்றி: **உலகின் புதிய கடவுள்**

## மந்திரச்சொல்

உன்னை நீதான் வெளிப்படுத்த வேண்டும்.
ஏனென்றால், உன்னைத்தவிர வேறு
யாருக்கும் உன்னை தெரியாது.

www.gyanaguru.com






**நிலா உன்னுடன்**
**கூடவே ஓடி வருவது**
**என்றைக்கு நின்றதோ**
**அன்றோடு முடிந்தது**
**உன் பால்யம்.**
**அதன்பின்**
**நீ விளையாடியதெல்லாம்**
**திருடன் போலீஸ் விளையாட்டு.**

**- கல்யாண்ஜி**

www.gyanaguru.com

# விதைத்தவன் தூங்கினாலும், விதைகள் தூங்குவதில்லை!



ஆழ்மனமே தாழ் திறவாய்!

## அத்தியாயம்-9

கணவன், மனைவி என்றாலே ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, ஒருவரையொருவர் சார்ந்து வாழ்வதுதான் வெற்றிகரமான வாழ்க்கை என்று கருதப்படுகிறது. இன்னும் துல்லியமாக சொல்வது என்றால், யாராவது ஒருவர் முழுமையாக விட்டுக்கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். மகிழ்ச்சியாக வாழ்கிறார்களோ இல்லையோ, கணவன், மனைவி என்றால் அவர்கள் சேர்ந்து வாழவேண்டும் என்ற எதிர்பார்ப்பு எல்லோரிடமும் இருக்கிறது.

இதற்காக பெண்கள்தான் பெரும்பாலும் தியாகம் செய்பவர்களாக இருக்கிறார்கள். தங்களுடைய ஆசை, விருப்பம், வேலை, உறவு போன்றவற்றை விட்டுக்கொடுத்து கணவனுக்காகவும், பிள்ளைக்காகவும் வாழ்ந்துவருகிறார்கள். அதனால்தான் பெரும்பாலோர், 'பிள்ளை மட்டும் இல்லேன்னா, இந்த வாழ்க்கையே வேண்டாம்னு போயிருப்பேன். பிள்ளைக்காகத்தான் அமைதியா சகிச்சிட்டு வாழ்ந்துக்கிட்டு இருப்பேன்" என்று சொல்வார்கள்.

அப்படியென்றால், அந்த கணவன் அல்லது மனைவி அத்தனை கொடுமைக்காரா என்று பார்த்தால், அப்படி இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. ஆனால் அவர்களில் ஒருவர் மட்டும் வேலை, ஆசை, நட்பு, உறவு, பழக்கவழக்கம் போன்ற எதையும் அடுத்தவருக்காக விட்டுக்கொடுத்திருக்க மாட்டார். திருமணத்திற்கு முன்பு எப்படியிருந்தாரோ, அப்படியே திருமணத்துக்குப் பின்னும் இருப்பார்.

ஒருசில வீடுகளில் கணவனுக்கு மீன் பிடிக்காது என்றால், அந்த வீட்டில் மீன் சமைப்பதில்லை. இது மனைவிக்கு இழைக்கப்படும் அநீதி என்பதைக்கூட கணவர்கள் உணராமல், 'இப்போ என் மனைவியும் மீன் சாப்பிட மாட்டாங்க' என்று பெருமையாகக் கூறுவார். அதை ஏற்றுக்கொண்டு, 'என் ஒருத்திக்காக எதுக்கு மீன்..? என்று மனைவியும் ஆசையை குப்பையில் போட்டுவிடுவார்.

இப்படி ஒருவர் சுயநலத்துடன் இருக்கும்போது, இன்னொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் இருந்தால்தான், அந்த உறவு சண்டை, சச்சரவு இல்லாமல் நகர்கிறது. இவர்கள் சேர்ந்துவாழ்வதற்கு சாத்தியமாவது மனைவியின் ஆழ்மனது. குறிப்பாக கணவர் மீது இவர் வைத்திருக்கும் ஜீரோ எதிர்பார்ப்பு.

அப்படி இல்லாமல் இரண்டு பேரிடமும் எதிர்பாப்புகள் மட்டும் இருந்தால், அங்கே சின்னச்சின்ன விஷயங்களிலும் சண்டை வரத்தான் செய்யும். தனித்தனியாகப் பார்த்தால் நல்ல மனிதர்களாக இருக்கிற இரண்டு பேரும், திருமணம் எனும் பந்தத்தில் தொடர முடியாமல் சண்டை போட்டு தோற்றுப் போகிறார்கள்.

# பணம் தரும் பாடங்கள்

“எனக்குப் பணம் பெரிசில்லை...!” என்று பேசிவிட்டுப் பணம் இல்லை என்று புலம்பாதீர்கள். பணம் உங்கள் வாழ்க்கைத் தேவைகளை, லட்சியங்களை அடையவும் உதவுகிறது. அதை முறையாகப் பெறவும், சிறப்பாகச் சேமிக்கவும், முதலீடு செய்யவும், சரியான பொருளாதார முடிவுகள் எடுக்கவும் பணம் பற்றிய சுகாதாரமான எண்ணங்கள் வேண்டும்.

பணம் சேர வேண்டுமா? “ எனக்குத் தேவையான செல்வம் எனக்கு என்றும் கிடைக்கிறது!” என்று சொல்லி வாருங்கள். பணப்பெட்டி முதல் பர்ஸ் வரை சுத்தமாக வையுங்கள். கடன் வாங்குவதிலும் குறுக்கு வழியில் பணம் பண்ணுவதிலும் உங்கள் சிந்தனையைச் செலவிடாமல் உங்கள் திறமைகளைப் பற்றி அதிகம் சிந்தியுங்கள்.

பணம் சேர வேண்டுமா? “ எனக்குத் தேவையான செல்வம் எனக்கு என்றும் கிடைக்கிறது!” என்று சொல்லி வாருங்கள். பணப்பெட்டி முதல் பர்ஸ் வரை சுத்தமாக வையுங்கள். கடன் வாங்குவதிலும் குறுக்கு வழியில் பணம் பண்ணுவதிலும் உங்கள் சிந்தனையைச் செலவிடாமல் உங்கள் திறமைகளைப் பற்றி அதிகம் சிந்தியுங்கள். பணக்கஷ்டம் பற்றி அன்னியருடன் புலம்புவதை நிறுத்தி, அதன் பாடங்களை மட்டும் கற்றுக் கொள்ளுங்கள். பணத் தட்டுப்பாடு சில பாடங்களை உங்களுக்கு வழங்க முயல்கிறது. அந்த பாடங்களை நீங்கள் கற்கும் வரை அவை உங்களைத் தொடர்ந்து கொண்டிருக்கும்!



## ஆழ்மனமே தாழ் திறவாய்!

இதற்கு காரணமும் ஆழ்மனம்தான்.

ஆம், இந்த திருமண வாழ்வு எப்படி முடியும் என்று அவர்கள் ஆழ்மனதில் என்ன முடிவு எடுத்திருக்கிறார்களோ, அதன்படியே வாழ்க்கை நகரும். அதாவது, சந்தோஷமாக நகருமா... சண்டை போட்டுக்கொண்டே நகருமா அல்லது பிரிந்துபோக நேருமா என்பதில், எந்த பதிலை ஆழ் மனதில் பதிந்து வைத்திருக்கிறார்களோ, அதுதான் அவர்களுடைய வாழ்க்கையின் முடிவாக இருக்கும்.

கணவன், மனைவி உறவு என்றால் சண்டை போட்டபடியே நகர்வதுதான் நடைமுறை என்று மனதுக்குள் முடிவெடுத்திருந்தால், தினமும் ஏதேனும் விஷயத்துக்காக சண்டை போட்டு, அவர்களே பின்னர் சமாதானமும் ஆகிவிடுவார்கள். இவர்கள் பிரிவதற்கு வாய்ப்பு இல்லை.

அதுவே, ’கொஞ்சகாலம் வாழ்ந்து பார்ப்போம், நம் எதிர்பார்ப்புகள் நிறைவேறினால் சேர்ந்து வாழ்வோம் அல்லது பிரிந்துவிடலாம்’ என்று மனதில் நினைத்திருந்தால், தினசரி நடக்கும் சண்டை ஒவ்வொன்றும் பிரிவை நோக்கியே நகரும். என்றாவது ஒரு நாள் பெரிய சண்டை வெடித்து, அதன் மூலம் பிரிவு நிகழ்ந்துவிடும்.

கணவன், மனைவி உறவில் சண்டை நடந்தாலும் சந்தோஷம் அதிகம் இருக்கும் என்பது ஆழ்மனதில் இருந்தால், அவர் சண்டை நடப்பதை பெரிதாகவே எடுத்துக்கொள்ள மாட்டார். உறவில் கிடைக்கும் சின்னச்சின்ன மகிழ்ச்சியையும் பெரிதாக நினைப்பார். எனவே, இந்த உறவு நல்லபடியாகத் தொடரும்.

இதில், இரண்டு பேரின் ஆழ்மனதும் வெவ்வேறு எண்ணத்தில் இருந்தால், யாருக்கு வெற்றி கிடைக்கும்..?

இது, கணவன் அல்லது மனைவியின் நடவடிக்கைகளின் அடிப்படையில் உறுதி செய்யப்படும். அதாவது, கணவர் அல்லது மனைவி அதிக அன்பு காட்டுபவராக அல்லது அதிக கோபம் காட்டுபவராக இருந்தால், அது அடுத்தவர் ஆழ்மனதில் தாக்கத்தை மாற்றத்தை உருவாக்கிவிடும்.



இந்த உறவு சரிப்படாது என்ற எண்ணத்தில் நுழைந்த பெண், கணவனின் அன்பைக் கண்டு மனம் மாறுவது உண்டு. அதேபோல் சந்தோஷமாக வாழவேண்டும், எது நடந்தாலும் பிரியக்கூடாது என்று திருமண பந்தத்தில் நுழையும் பெண், கணவனின் தீராத சந்தேகம், பிடிவாதம்

### மந்திரச்சொல்

வாழ்க்கை நேரத்தின் முக்கியத்துவத்தை கற்றுத்தருகிறது. நேரம் வாழ்க்கையின் அருமையை சொல்லித்தருகிறது.

போன்றவைகளால் மாறிவிடுவதும் உண்டு.

அதேநேரம், காலப்போக்கில் எல்லாம் சரியாகிவிடும் என்ற எண்ணம் இருந்தால், அந்த உறவு எத்தனை சண்டை போட்டாலும் பிரிவதற்கு சிந்தனை செய்யாது. பொதுவாகவே எதிர்பார்ப்புகள் மாறக்கூடியவை. காலத்தால் அழியக்கூடியவை. அனுபவத்தால் சமரசம் செய்யக்கூடியவை என்பதை உணர்ந்து விட்டால் பல உறவுச் சிக்கல்கள் சீராகிவிடும்.

எல்லோருடைய எதிர்பார்ப்புகளும் அம்மா, அப்பா, குடும்பம், ஜாதி, மதம், ஊர், சினிமா, அக்கம் பக்கத்து நண்பர்களால் உருவாக்கப்படுபவை. எனவே, இதுவரை அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை மட்டுமே சரியானது என்ற எண்ணம்தான் நிறைய பிரச்னைகளுக்கு காரணமாக அமைந்துவிடுகிறது. அதனால்தான் நிறைய சண்டைகள், ’என் அப்பா போல நீ இல்லை... என் அம்மா போல நீ நடந்துகொள்ளவில்லை” என்றே தொடங்குகிறது.

ஓர் உண்மை சம்பவத்தை இங்கே சொல்ல வேண்டும். 25 ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்த தம்பதியர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. நிறைய தம்பதிகள் கலந்துகொண்டனர்.

அனைவரிடமும், ‘உங்களவர், உங்களை சந்தோஷமாக வைத்திருக்கிறாரா..?” என்ற ஒரே ஒரு கேள்வி கேட்கப்பட்டது. மனதில் தோன்றும் உண்மையான பதிலை எழுதச் சொன்னார்கள்.

பெரும்பாலான பதில், ‘அவர் அவருடைய இஷ்டத்துக்கு இருப்பார், நான் என் இஷ்டத்துக்கு இருக்கிறேன். பெரிதாக சண்டைகள் கிடையாது. அதேநேரம் சந்தோஷமாக இருக்கிறேன் என்றும் சொல்ல முடியாது’ என்பதாகத்தான் இருந்தது. அதாவது, இத்தனை ஆண்டுகள் சேர்ந்து வாழ்வதற்கு அவர்களுக்கு ஜீரோ எதிர்பாப்பு என்பதுதான் இணைப்பாக இருந்திருக்கிறது. அவர்களிடம் அன்பு அல்லது பாசம் பெரிதாக இல்லை.

ஆனால், இரண்டு தம்பதியர் மட்டும், ‘நான் சந்தோஷமாக

“ எல்லோருடைய எதிர்பார்ப்புகளும் அம்மா, அப்பா, குடும்பம், ஜாதி, மதம், ஊர், சினிமா, அக்கம் பக்கத்து நண்பர்களால் உருவாக்கப்படுபவை. எனவே, இதுவரை அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை மட்டுமே சரியானது என்ற எண்ணம்தான் நிறைய பிரச்னைகளுக்கு காரணமாக அமைந்துவிடுகிறது. ”

இருப்பது என் கையில்தான் இருக்கிறது. அவரால் எனக்கு சந்தோஷத்தையோ துக்கத்தையோ கொடுத்துவிட முடியாது. ஆனால், நான் சந்தோஷமாக இருக்கிறேன்’ என்று எழுதியிருந்தனர். அவர்கள் எழுதியிருந்த பதிலை அனைவருக்கும் படித்துக் காட்டினார்கள்.

மகிழ்ச்சியான தம்பதியராக வாழும் வழியை அவர்களிடம் கேட்டனர். இரண்டு தம்பதியர்களும் சொன்னது இவைதான்.

- எங்கள் வீட்டிலும் சண்டை வரும், பிரச்னை வரும். ஆனால், என்ன சண்டை ஏற்பட்டாலும், அவை எல்லாம் நிச்சயம் சரியாகிவிடும். இன்று இல்லையென்றாலும் நாளை இந்த பிரச்னை முடிவுக்கு வந்துவிடும் என்று மனதார நம்புவேன்.
- சண்டையைத் தீர்க்கும் வழி தெரியாது என்றாலும், அது தீர்ந்துவிடும் என்பது மட்டும் தெரியும்.
- சண்டை சரியாகிவிடும் என்று நம்பிக்கையை மீண்டும் மீண்டும் மனதில் விதைத்துக்கொண்டே இருந்தால், அந்த நம்பிக்கையே எல்லாவற்றையும் தீர்த்துவைத்துவிடும்.
- இந்த சண்டையால் பெரிய ஆபத்து வரலாம் என்று ஒருபோதும் எதிர்மறையாகப் பேசுவதில்லை, சிந்திப்பதும் இல்லை.
- விதைத்தவன் தூங்கினாலும் விதைகள் தூங்குவதில்லை என்பார்கள். அதுபோல் எங்களுக்குள் சண்டை நடக்கும்போது, பிரச்னை ஏற்படும்போது, எல்லாம் விரைவில் சரியாகிவிடும் என்று எண்ணிக்கொண்டே இருப்பது மட்டும்தான் என் வேலை. அதன்பிறகு எல்லாமே சரியாகிவிடும் என்றனர்.

ஆம், ஆழ்மனதில் என்ன நினைக்கிறீர்களோ, அதை இயற்கை நடத்திக் கொடுக்கும் என்ற அற்புதத்தை அந்த தம்பதிகள் அனைவருக்கும் சொல்லிக் கொடுத்தார்கள். ஜீரோ எதிர்பார்ப்புடன் வாழும்போது சண்டை இல்லாமல் வாழ முடியும். அதுவே, சண்டை போட்டாலும் மகிழ்ச்சியாக வாழமுடியும் என்ற நம்பிக்கை இருந்தால், அந்த உறவு யாருக்கும் இடைஞ்சல் இல்லாமல் நகர்வதாக இருக்கும்.

எனவே, முதலில் ஜீரோ எதிர்பார்ப்பை மனதுக்குள் கொண்டுவாருங்கள். அதன்பிறகு மகிழ்ச்சியான மனநிலைக்கு மாறுங்கள். ஆழ்மனதில் மகிழ்ச்சியான மண வாழ்வுக்கு ஆசைப்பட்டால், அது நிச்சயம் சாத்தியம்தான்.

இப்போது வாழ்க்கையின் முக்கியமான ஒரு விஷயத்துக்கு வருவோம். எல்லோருக்கும் தெரியும், வாழ்க்கைக்கு பணம்தான் அத்தியாவசியம் என்பது. பணத்தை உங்களை நோக்கி வரவழைக்க முடியும். அதற்கு என்ன செய்வது..?

**– அடுத்து பார்க்கலாம்.**





www.gyanaguru.com



# மனம் விட்டு பேசலாம் வாங்க

மகிழ்ச்சியை மனதார ஏற்றுக்கொள்வது போல், வாழ்வின் துன்பத்தையும் சில நேரங்களில் மனதார ஏற்கத்தான் வேண்டும். காலம் எல்லா துன்பங்களையும் துடைத்து தள்ளிவிடும் என்றாலும், அதுவரை காத்திருக்கத் தேவையில்லை.

ஆம், துன்பத்தில் இருப்பவர்கள் மனம்விட்டுப் பேசுவது ஓர் எளிய தீர்வு.

எல்லோருக்கும் துன்பத்தை கொட்டித் தீர்ப்பதற்கு தாயின் தோள்கள் கிடைத்துவிடு வதில்லை. உங்கள் சோகங்களைக் கேட்ப தற்கும் ஆறுதல் சொல்வதற்கும் ஞானகுரு மையம் இருக்கிறது.

உங்கள் மனதில் இருக்கும் அத்தனை பாரங்களையும் இறக்கி வைக்க வாருங்கள். ஞானகுரு மைய உறுப்பினர்களிடம் பேசுவதற்கு கட்டணம் உண்டு.

உங்கள் தேவைக்கு தொடர்புகொள்ளுங்கள்...


## ஞானகுரு மகிழ்ச்சி

**நிறுவனர் :** எஸ்.கே.முருகன், **வெளியீட்டாளர் மற்றும் ஆசிரியர் :** எம்.நிர்மல், **நிர்வாக மேலாளர் :** எம்.நிலா

**வடிவமைப்பாளர்:** வி.கிராபிக்ஸ், கே.எம்.பிரசன்னா



ஞானகுரு பப்ளிகேஷன், 22, நாகார்ஜுனா நகர் 2வது தெரு, கோடம்பாக்கம், சென்னை – 600 024.

**தொடர்புக்கு :** 044 24730338, +91 98844 53014, +91 81486 14112 **மெயில் :** skmnila1@gmail.com